www.tamilarangam.net

ரூ. 3-00

நட்புறவுப்

# பாலம்

இலக்கிய மாத இதழ்



ஞாய

பாரதிதாசன்

ஏப்ரல் 90

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாஜி வதைமுகாமில் கைதியாக இருந்த
ஃபெலிக்ஸ் நுஸ்பாம் வரைந்தது.

www.tamilarangam.net


# பாலம்

இலக்கிய மாத இதழ்
ஏப்ரல் 1990

26

ஆசிரியர் :
இரா. திரவியம்

ஆசிரியர் குழு :
சமந்தா
இளம்பிறை
குமார்

தனியிதழ் ரூ. 3.00
ஆண்டுச் சந்தா ரூ. 30.00
அரையாண்டு சந்தா ரூ. 15.00

தொடர்பு முகவரி :
நிர்வாகி
பாலம்
12, முதல் பிரதான சாலை
நேருநகர், அடையாறு
சென்னை-20

நிர்வாக ஆசிரியர்:
அதியமான்


## நமீபியா வாழ்க

மார்ச் 20, நள்ளிரவு அது நிகழ்ந்தது.

ஆம். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு நமீபியத் தலைநகரான விண்ட்ஹோக்கில் நிகழ்வுற்றது.

நிறவெறிபிடித்த தென்னாப்பிரிக்கக் கொடி, தென்னாப்பிரிக்க இராணுவ வீரனொருவனால் இறக்கப்பட்டது. விடுதலை பெற்ற நமீபியக் கொடி வானுயர பறக்க விடப்பட்டது.

1884ஆம் ஆண்டு தொடக்கம் ஜெர்மனியின் காலனியாக இருந்து வந்த நமீபியாவை, முதல் உலகப் போரின் முடிவில் (ஜெர்மனி தோற்கடிக்கப்பட்டதனால்) பிரிட்டன் அதைத் தன்னுடைய காலனியாக கைப்பற்றிக் கொண்டது. குறிப்பிட்ட காலத்திற்குப் பின் நமீபியாவுக்கு விடுதலை அளிக்க வேண்டும் என்ற ஐ.நா.வின் தீர்மானத்தை நிராகரித்துவிட்டு, நமீபியாவை தென் ஆப்பிரிக்க நிறவெறி அரசிடம் கையளித்துவிட்டு பிரிட்டன் சென்றது.

சாம் நுஜோமா தலைமையில் தேச பக்த சக்திகள், ஸ்வாப்போ இயக்கத்தின் கீழ் அணிதிரண்டு, ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கின.

ஸ்வாப்போ இயக்கத்துக்கு அணிசாரா நாடுகள் வழங்கிய உறுதியான ஆதரவும், ஐ.நா.வின் தலையீடும், 1989 நவம்பரில் ஐ.நா. மேற்பார்வையாளர்களின் கீழ் (ஐ.நா.வில் 1978ல் நிறைவேற்றப்பட்டது; தீர்மானம் எண் : 435) தேர்தல் நடைபெற்றது. 72 உறுப்பினர்கள் உள்ள நமீபிய அரசியல் சாசனப் பேரவையில் ஸ்வாப்போ 41 இடங்களைப் பிடித்தது.

ஏறத்தாழ 15 இலட்சம் மக்களைக் கொண்ட நமீபியாவில் 70 ஆயிரம் வெள்ளையர்கள் உள்ளனர். இவர்களின் ஆதிக்கத்தில்தான் நமீபியாவின் பொருளாதாரமான விவசாயம், மீன்பிடித் தொழில், சுரங்கத் தொழில் ஆகியன உள்ளன.

பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலையில் நமீபியா பெற்ற விடுதலையானது நிறவெறியர்களுக்கும், ஒடுக்குமுறையாளர்களுக்கும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் கிடைத்த மிகப் பெரிய தோல்வியாகும்.

நமீபிய மக்களுக்கு 'பாலத்தின்' வாழ்த்துக்களும் அன்பும். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலையங்கம்:

# காவிரி எனும் முடிச்சு

காவியப்புகழ் பெற்றிருந்த காவிரி வற்றி வரண்டு வருகிறது. தமிழ் இலக்கியங்கள் மட்டுமே அதன் புகழ்பாடக் காரணம் காவிரியின் பாசனப்பரப்புப் பண்டுதொட்டுத் தமிழகத்தில் அமைந்திருந்ததுதான். 1924 ஒப்பந்தம் ஏற்படவே இல்லை என்றால்கூடத் தமிழகத்திலுள்ள காவிரிப் பாசன விவசாயிகளின் பாசன உரிமையைக் கர்னாடகத்தால் மறுக்க முடியாது; அப்படி மீறினால் அது ஜனநாயக வரம்புகளை மீறியதாகும்.

எந்த ஒரு நாடும் தன் நாட்டின் வழியாகப் பாய்ந்தோடும் ஆற்றின்மீது உரிமை கொண்டாடும் போது கீழே உள்ள வேற்று நாட்டின் பாசன உரிமையை மறுக்கக்கூடாது என்பது சர்வதேசச் சட்டம். அப்படி இருக்கையில் இந்தியக் கூட்டமைப்பிலுள்ள கர்னாடகம் காவிரியில் தமிழகத்துக்குள்ள பாசன உரிமையை மறுப்பது என்பது அடாவடித்தனமாகும்.

இது இவ்வாறிருக்கக் கர்னாடக முதலமைச்சர் வீரேந்திரப்பாட்டீல் அபத்தமாகப் பேசியுள்ளார். "1924 ஒப்பந்தம் உருவான காலத்தில் கர்னாடக் அரசே உருவாகி இருக்கவில்லை. எனவே, வேறொரு அரசோடு செய்துகொண்ட ஒப்பந்தம் கர்னாடகத்தைக் கட்டுப்படுத்தாது" என்று பேசியுள்ளார்.

கிருஷ்ணராஜசாகர் மைசூர் சமஸ்தானத்துக்கு உட்பட்டதாக இருந்தபோது சென்னை ராஜதானி மைசூர் சமஸ்தானத்துடன்தான் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்க முடியும். மொழிவாரி மாநிலம் பிரிக்கப்பட்டபோது சில பகுதிகள் தவிர மைசூர் சமஸ்தானம் கர்னாடகத்தோடு இணைக்கப்பட்டது. அப்போதுகூடக் காவிரி ஒப்பந்தம் ரத்தாவதாக அரசு அறிவிக்கவில்லை. ஏன்? சர்வதேசச் சட்டத்துக்கு முரணாக அது அமைந்துவிடும் என்பதால்தான். மேலும் இந்தியக் கூட்டமைப்பை ஒரு கேள்விக்குறியாகக் விரும்பாமையும் ஒரு காரணமாகஇருக்கலாம். எனவே, தமிழகத்தின் கூற்றுப்படி 1924 ஒப்பந்தம் இன்னும் காலாவதி ஆகவில்லை என்பதே சரியானது.

மேலும், 1967-க்குப் பின் கபினி, ஹேமாவதி, ஹாரங்கி ஆகிய காவிரியின் கிளையாறுகளில் அணைகட்டி நீரைத் தேக்கியதாலும் மேட்டூருக்கு வரும் நீர்வரத்துக் குறைந்துபோனது. இதுவும் 1924 ஒப்பந்தத்துக்கு எதிரானது. மேலும் தமிழகத்தின் காவிரிப்பாசன விவசாயிகளின் உரிமையை மீறுவதும் ஆகும். எனவே, 1924 ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கும்போது மேலே கண்ட அணைகளிலிருந்தும் தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரின் அளவுகள் வரையறுக்கப்படவேண்டும். அதுதான் புதிய நிலைமைகளுக்கேற்ற ஒப்பந்தமாக அமையும்.

நிலைமை இவ்வாறிருக்க கர்னாடகமுதல்வர் வீரேந்திரப்பாட்டீல் அடாவடித்தனமாகப் பேசியிருப்பது அவரிடம் பேச்சுவார்த்தைஎன்பதெல்லாம் நாகரிகமான விஷயமே அல்ல என்பதையே நிரூபிக்கிறது. ஆனால் வீரேந்திர பாட்டீல் பேச அழைத்ததும் தமிழக முதல்வர் கருணாநிதி பேச ஒப்புக்கொண்டுள்ளது ஏன்? நடுவர் மன்றம் அமைக்கவேண்டும் என மத்திய அரசை வலியுறுத்துவது ஒன்றிலேயே குறியாய் இல்லாமல் பேச்சுவார்த்தையில் சிக்கிக் கொள்வானேன்?

இதுவரை மத்தியிலிருந்த காங்கிரஸ் அரசாங்கம் தனது அரசியல் சதுரங்கத்தில் காவிரிநீர் பிரச்சினையை ஒரு பகடைக் காயாகவே உருட்டி விளையாடி வந்திருக்கிறது என்பதை மறுக்கமுடியாது. தற்போது தேசிய முன்னணி அரசும் அதே வேலையைத்தான் செய்துவருவதாகத் தெரிகிறது. இல்லையென்றால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழகம் நடுவர் மன்றம் அமைக்கவேண்டும் என்று கோரிய அளவிலேயே அமைத்திருக்கவேண்டும். கர்னாடக அரசு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தால்கூட மத்திய அரசு நடுவர் மன்றம் அமைப்பதைத் தடுக்க முடியாது. அப்படி இருந்தும் தேசிய முன்னணி அரசு நடுவர் மன்றம் அமைக்காமல் இழுத்தடித்து வருவது ஏன்? கர்னாடகத்தில் ஜனதாதளத்தின் செல்வாக்கை மேலும் குறைத்துக் கொள்ளக் கூடாது எனும் குறுகிய அரசியல் கண்ணோட்டமே காரணம்.

முதலில் தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக, "இனிக் காவிரிப் பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை தீர்வைக் கொண்டு வராது. எனவே, மத்திய அரசு உடனே நடுவர் மன்றம் அமைக்கவேண்டும், எனத் தீர்மானம் நிறைவேற்றிய பின் முதலமைச்சரோ அரசாங்கமோ சட்ட மன்றத் தீர்மானத்திற்கு முரணாகப் பேச்சு வார்த்தையில் ஈடுபடலாமா? இதை முதல்வர் கருணாநிதி சிந்திக்கவேண்டும்.

இனிக் காவிரியில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட பேச்சுவார்த்தை பயன்படாது. இதுவரை பேச்சுவார்த்தை என்பது நடுவர் மன்றம் அமைப்பதைத் தள்ளிப் போடவே பயன்பட்டு வந்துள்ளதை உணர வேண்டும். நடுவர் மன்றம் அமைக்க வலியுறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை; மத்திய அரசும் நடுவர் மன்றம் அமைத்தே தீரவேண்டும். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏப்ரல் 29 - பாரதிதாசனின் நூற்றாண்டு தொடக்கம்

# கற்பூரச் சொற்கோ

தியாகு

நாற்பதைத் தொடாமலே தாய்த் தமிழைத் தவிக்க விட்டுப் போனார் பாரதியார். எழுபதைத் தாண்டி நம்மோடிருந்து இறுதிக் காலம் வரை இன்சுவைக் கவிதைகள் படைத்துக் கொடுத்தவர் பாவேந்தர்—பாரதிதாசனாகிய கனகசுப்புரத்தினம்.

இன்சுவைக் கவிதைகளே என்றாலும், இதர வகைப் படைப்புகளும் இனியவையே என்றாலும், பாவேந்தரின் எழுத்தோவியங்களை வெறும் இரசனைப்பொருளாக்கி விடலாகாது. இவற்றால் இன்றைய சமுதாயத்துக்கு—அதன் முன்னேற்றத்துக்கு— என்ன பயன் என்ற கேள்விக்கு விடை காண வேண்டும். காணும் பொருட்டு, பாவேந்தர் ஆக்கித் தந்த இலக்கியச் செல்வத்தை விஞ்ஞான வழியில்—காலமும் களமும் கருதி—ஆய்ந்திடல் அவசியமாகிறது. இந்த ஆய்வின் தொடக்கமாய் முதலில் அவரது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை வரைந்து நம்முன் வைத்துக் கொள்வோம்.

## இளமைக் காலம்

இந்திய நாடு பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் காலனியாக அடிமைப்பட்டுக் கிடந்த காலம் அது. மிகச் சில பகுதிகள் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திடமும், வேறு சில பகுதிகள் போர்த்துகீசிய ஏகாதிபத்தியத்திடமும் அடிமைப்பட்டிருந்தன. ''பிரெஞ்சு இந்தியா''வின் தலைமையகமாய் இருந்தது புதுவை என்கிற புதுச்சேரி (பாண்டிச்சேரி).

அடிமையுற்றுக் கிடந்த புதுவையில்தான் பாவேந்தர் 1891 ஏப்ரல் 29 ஆம் நாள் பிறந்தார். தமது இளமைக் காலம் பற்றி அவரே தம் கைப்பட எழுதிய குறிப்பைப் பார்போம்:

### இளமை—

தந்தையார் கனகசபை முதலியார். அன்னையார் இலக்குமி அம்மையார். தந்தையாரின் முதல்மனைவி இறந்ததால் மறுதாரமாக இலக்குமியை மணந்து கொண்டார்.

முதல் தாரத்துக்கு தெய்வ நாயகம் என்ற பிரெஞ்சு மொழி வல்லுநர் ஒரே பிள்ளை.

நான், என் அண்ணன் சுப்பராயன், தமக்கையார் சிவகாமி, தங்கை இராசாம்பாள் ஆகியோர் இரண்டாந்தாரத்தின் மக்கள்.

அந்தக் காலத்தில் தமிழ்ப் புலவர்களால் தனிமுறையில் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களுக்குப் பெயர் திண்ணைப் பள்ளிக்கூடம்.

தமிழுக்கும் தமிழ் நெறிக்கும் புறம்பான பள்ளிக் கூடங்களையெல்லாம் சர்க்கார் பள்ளிக்கூடம் என்பார்கள்.

எனக்கு வினவு தெரிந்த ஆறு ஆண்டு முதல் பதினேழு ஆண்டு வரைக்கும் திண்ணைப் பள்ளி தவிர உலகில் வேறு எந்தப் பள்ளியும் தெரியாது.

திண்ணைப் பள்ளிகளில் உரைநடை அரும்பத விளக்கத்தோடு பாடம்நடக்கும். செய்யுள்கள் மூல பாட மட்டும் நெட்டுருவாக்கப்படும், பொன்னிலக்கம் எண்சுவடி கருத்தாகச் சொல்லிக் கொடுப்பார் ஆசிரியர்.

பன்னிரண்டு வயதில் திருக்குறள் 1330 செய்யுள்களும் மனப்பாடம் எனக்கு, குமரேச சதகம் முதலியவைகளும் மனப்பாடம் எனக்கு. கணக்கில் என் பள்ளியில் சட்டாம்பிள்ளை நான்!...

## ஆசான்கள் மூவர்

சுப்புரத்தினத்தின் குடும்பத்தினர் வாழ்ந்த பகுதியிலேயே புகழ்பெற்ற திண்ணைப் பள்ளியை நடத்தி வந்தவர் **திருப்புளி சாமி அய்யா** என்பவர். பாவேந்தரின் முதல் ஆசான் என்று இவரைக் குறிப்பிடல் தகும். எண்ணும் எழுத்தும் கற்பித்ததோடு, திருப்பாவை உள்ளிட்ட சமய இலக்கியங்களையும், நாடகக் கலையையும் சொல்லிக் கொடுத்தவர் அவர்.

திண்ணைப் பள்ளியில் படித்து முடிந்தபின், கல்வே கல்லூரி எனப் பெயர் பெற்ற

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உயர்நிலைப் பள்ளியில் கல்வியைத் தொடர்ந்தார் சுப்புரத்தினம். இங்கு அவருக்கு ஆசானாய் வாய்த்தவர் **புலவர் பங்காருப் பத்தர்.** இவரே புதுவை தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும், கலைமகள் எனும் இலக்கிய இதழின் ஆசிரியராகவும் இருந்தார். இவரிடம் தமிழாசிரியப் பயிற்சி பெற்று, இறுதித் தேர்வில் நாற்பது மாணவர்களில் முதல்வராகத் தேறினார் சுப்புரத்தினம்.

சுப்புரத்தினத்தின் அறிவுத் தாகம் பள்ளிப் படிப்போடு அடங்காது போனதால், அப்போதே **சாரம் மகாவித்வான் பு. அ. பெரியசாமி பிள்ளை** என்ற பெரும் புலவரிடம் தினந்தோறும் சென்று இலக்கிய இலக்கணம் பயின்றார்.

**ஆசிரியப் பணி**

1909ஆம் ஆண்டு ஜுலை திங்களில் சுப்புரத்தினம் தமிழாசிரியராகப் பொறுப்பேற்றார். கல்வித்துறை உயர் அதிகாரியாய் இருந்த கய்யார் என்பவர் இவ்வேலை அவருக்குக் கிடைக்க உதவியதாகக் கூறப்படுகிறது. பாவேந்தரின் ஆசிரியப்பணி காரைக்காலை அடுத்த நிரவி அரசினர் பள்ளியில் தொடங்கி 37 ஆண்டு நீடித்தது. காரைக்காலை அடுத்த நிரவி, புதுவை சார்ந்த முத்திரைப்பாளையம், கூனிச்சம்பட்டு, வில்லியனூர், ஆலங்குப்பம், நள்ளாறு, திருபுவனை, திருமலைராயன் பட்டினம், புதுவை முத்தியால்பேட்டை, புதுவை மாதா கோயில் தெருபள்ளி, சுய்ர்கூப் வீதி பள்ளி, மீண்டும் மாதா கோயில் தெரு பள்ளி— பாவேந்தர் இப்படிப் பல ஊர்களில், பல இடங்களில், பல பள்ளிகளில் ஆசிரியப் பணி புரிந்து 1946 நவம்பர் 7ஆம் நாள் ஓய்வு பெற்றார்.

பாவேந்தர் தமது பணிக் காலத்தில் ஓயாமல் இப்படி ஊர் ஊராக மாற்றப்பட்டது ஒன்றே எவருக்கும் தலைவணங்காத அவரது குணத்துக்குப் போதிய சான்று. ஒவ்வோரிடத்திலும் சென்ற புதிதில் எதிர்ப்புக்கு ஆளாவதும், வெகு விரைவில் ஊர் மக்களின் அன்புக்குப் பாத்திரமாவதும் அவருக்குத் தொடர்ந்து கிடைத்த அனுபவமாய் இருந்துள்ளன. உள்ளூர் அரசியலில் காட்டிய ஈடுபாடு ஆங்காங்கு சிலரது பகையையும் சம்பாதித்துக் கொடுத்துள்ளது.

1919ஆம் ஆண்டு சுப்புரத்தினம் திருபுவனையில் ஆசிரியப்பணி ஆற்றி வந்தார். அப்போது ஆட்சிப் பொறுப்பில் இருந்த கெப்ளே என்பாருக்கு எதிராக சுப்புரததினம் தேர்தல் வேலை செய்தார். சுப்புரத்தினத்தின் ஆதரவு பெற்ற வேட்பாளரே முடிவில் வெற்றி பெற்றார். கோபமுற்ற கெப்ளே தமது தோல்விக்குக் காரணம் இந்தத் தமிழ் வாத்தியாரே எனக் கருதி, அவரை சிறைப்படுத்தி வழக்கு கொடுத்ததோடு வேலை நீக்கமும் செய்தார். குட்டியா சபாபதிப்பிள்ளை என்ற வழக்கறிஞர் பாவேந்தர் சார்பில் இந்த வழக்கை நடத்தி வெற்றியும் தேடி கொடுத்தார். பாவேந்தர் சிறைப்பட்டிருந்த காலம் ஒரு மாதம் 3 நாள்.

சென்றவிடமெல்லாம் ஊர் மக்களின் பிரச்சினைகளைக் கையிலெடுத்து ஊக்கத்துடன் செயல்படுவது சுப்புரத்தினத்துக்கு வழக்கமாகிப் போனாலும், அதனால் அவர் தமது கல்விப் பணியை சற்றும் புறக்கணித்தாரில்லை. ஏட்டிலிருப்பதைப் படித்துக் காட்டி மாணவனைத் தேர்வெழுதும் பொறியாக மாற்றியமைக்கும் மாமூல் ஆசிரிய வேலையன்று அவர் செய்தது.

அக்காலத்தில் சென்னை அரசினர் நிர்ணயித்த பாட நூல்களே புதுவையிலும் ஏற்கப்பெற்றன. இவ்வகையில் குழந்தைகளுக்கு எழுத்தறிவிக்க பாலசிட்சை என்ற பாடத்திட்டம் பயன்படுத்தப்பட்டது. இதில் 'அ' என்ற எழுத்தை விளங்கச் செய்ய அணில் என்னும் சொல்லைக் குறித்து அணில் படமும் வரைந்திருந்தனர். குழந்தைக்கு மிகவும் பழக்கப்பட்ட 'அம்மா' என்ற சொல்தான் அணிலை விடவும் பொருத்தமானது என்று சுப்புரத்தினம் வாதிட்டார்.

பாலசிட்சையில் சுப்புரத்தினம் கோரிய இன்னொரு மாற்றம் இன்னுமகூட குறிப்பிடத்தக்கது. 'வ' என்ற எழுத்துக்கு வண்ணான் என்றும் 'ஐ' என்ற எழுத்துக்கு ஐயர் என்றும் எழுதி படமும் போட்டிருந்தது. சின்னஞ்சிறு குழந்தைகளின் உள்ளத்தில் சாதிவேற்றுமையைப் பதியச் செய்யும் இந்தப் பாடமுறையை ஏற்க மறுத்த பாவேந்தர், தாமே ஒரு பாடத் திட்டம் வகுத்து அதன்படியே கல்வி புகட்டினார்.

பாடப் புத்தகங்களின் முதற்பக்கத்தில் ''இவர் நமது ராஜா. இவர் இங்கிலாந்து நாட்டின் சக்கரவர்த்தி. இவர்...'' என்று ஆங்கிலேயப் பேரரசரின் படமும் போட்டிருந்தது. சுப்புரத்தினம் இது குறித்தும் கோபமுற்றார்.

**''நம்ம ஊரெல்லாம் குடியரசு நாடுன்னு சொல்கிறோம். 'சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம்' என்கிற கொள்கையை உலகத்துக்கே வழங்கின பிரஞ்சுக் குடியரசின், நம்ம பிள்ளைங்க எடுத்த எடுப்பிலே படிக்கிற பாடம் என்ன**

www.tamilarangam.net



தெரியுமா? இவர் நமது ராஜா, இங்கிலாந்தின் சக்கரவர்த்தி!' ரொம்ப நல்லா இருக்குங்க.''

1789ஆம் வருடத்திய பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கை முழக்கமும் பிரெஞ்சுக் குடியரசு வாதமும் பாவேந்தரிடம் தொடக்க காலத்திலேயே செலுத்திய தாக்கத்தை இங்கே காண முடிகிறது. முடியரசானாலும் சரி, குடியரசானாலும் சரி, ஏகாதிபத்தியம் ஏகாதிபத்தியம் தான் என்ற பார்வை—பிரித்தானிய ஏகாதிபத்தியத்தைப் போலவே பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் மக்களுக்கு விரோதியே என்ற பார்வை-அக்காலத்தில் மட்டுமல்ல, பிற்காலத்திலும்கூட பாவேந்தரிடம் காணப் படவில்லை என்பது மெய்தான்.

பாவேந்தரின் எதிர்ப்பை ஏற்றுக்கொண்ட அரசு பாடநூலில் வரும் அரச வணக்கப் பாடலைக் கற்பிக்கத் தேவையில்லை என்று ஆணை பிறப்பித்ததாம்.

சுப்புரத்தினம் தம்மைப் போன்ற தமிழாசிரியர்களின் நலனுக்காகவும் மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட மதிய உணவைக் கொள்ளையிடுவதை எதிர்த்து மாணவர் நலனுக்காகவும் வாதாடிய, போராடிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சுப்புரத்தினம் நெட்டப்பாக்கத்தில் ஆசிரியராய் இருந்த போது, பள்ளித் தலைமை ஆசிரியர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களைப் பள்ளியில் சேர்த்துக்கொள்ள மறுத்து விட்டார். ரெட்டியார் சாதியினர் கோபித்துக் கொள்வார்கள் என்பது அவர் கூறிய காரணம். இது குறித்துக் கோபமுற்ற சுப்புரத்தினம் தாமே மேல் சாதியினரிடம் சென்று, அவர்களை அச்சுறுத்தி, தாழ்த்தப் பட்ட மாணவர்கள் பள்ளியில் சேர்ந்து படிப்பதற்கு வழி செய்தார். தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பள்ளியில் சேர்க்க மறுப்பதை வன்மையாகக் கண்டித்து **'புதுவை முரசு'** ஏட்டிலும் கட்டுரை தீட்டினார்.

இலக்கண-இலக்கியங்களை எல்லாம் மிக எளிய முறையில் கற்றுக் கொடுப்பதில் சுப்புரத்தினம் வல்லவராய்த் திகழ்ந்தார். பள்ளியில் சொல்லித் தந்ததோடு, வீட்டிலும் இலவசப் பயிற்சி வகுப்பு நடத்தினார். தேர்வில் மாணவர்களுக்கு மதிப்பெண் தருவதிலும் மேல் வகுப்புக்கு அனுப்பி வைத்ததிலும் தாராளமாய் நடந்து கொண்டார்.

பாவேந்தர் என்கிற மதிப்பிடற்கரிய வைரத்தின் பற்பல முகப்புகளில் ஒன்றுதான் அவரது ஆசிரியப் பணி என்றாலும், ஆசிரியப் பணி ஒன்றுக்காகவே தமிழுலகின் நிரந்தரப்போற்றுதலுக்குரியவர் அவரெனல் தகும்.

முப்பத்தேழு ஆண்டுக்கும் அதிகமாய் ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெற்ற நாளை (1946 நவம்பர் 8) ''எழிலுறு நாள்'' என்று போற்றி மகிழ்கிறார். நாட்குறிப்பில் அந்நாள் அவர் எழுதியிருக்கும் கவிதை :

> எட்டுப் பதினொன்று நாற்பத்தாறிட்ட
> எழிலுறு நாள்
> விட்டுப் பிரிந்தென் ஆசிரியப் பணி—
> மேலும் எனைக்
> கட்டுப் படுத்துவதொன்றில்லை! திங்கட்
> கடைசி தொறும்
> தட்டாது வந்திடும் ஐம்பான் வெண்பொற்
> காசு சம்பளமே!

## பாரதியார் நட்பு

பிரித்தானிய அரசின் அடக்குமுறையிலிருந்து தப்பி சுதந்தரப் போராளிகள் பலரும் புதுவையில் தஞ்சம் புகுந்து வந்த காலம். இப்படித் தஞ்சம் புகுந்தவர்கள் அங்கே 'சுதேசிகள்' எனப்பட்டார்கள்.

இந்த 'சுதேசிகளில்' ஒருவராகத்தான் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 1908ஆம் ஆண்டில் புதுவைக்கு வந்து சேர்ந்தார்.

பாரதியாருக்கு முன்பே அவரது கவிதைகள் நம் சுப்புரத்தினத்திற்குப் பரிச்சயமாகி விட்டன. பாரதியாரை பாரதியார் என்று தெரிந்து கொள்ளாமலே பலமுறை பார்த்த சுப்புரத்தினம் அவரது உருத்தோற்றத்தை ரவிவர்மா வரைந்த பரமசிவம் ஓவியத்தோடு ஒப்பிட்டு, 'ரவிவர்மா பரமசிவம்' என்றே தம் உள்ளத்துள் பெயர் சூட்டியும் விட்டார்.

இந்த நிலையில்தான் பாரதியாரின் உற்ற நண்பரும், 'கரடி கூடம்' எனப்பட்ட சிலம்பக் கூடம் ஒன்றை நடத்தி வந்தவருமான வேணு நாயக்கருக்குத் திருமணம் வந்தது. வேணு நாயக்கரின் சிலம்பக் கொட்டடி மாணவர் என்ற முறையில் சுப்புரத்தினமும் திருமணத்திற்குச் சென்றார். அங்குதான், அன்றுதான் வரலாற்றுப் புகழ்மிக்க நட்புறவுகளில் ஒன்று முகிழ்த்தது. எப்படி? பாவேந்தரே சொல்கிறார்:

> மாலை 3 மணிக்குக் கலியாணப்பந்தலில் பாட்டுக் கச்சேரி நடந்தது. பாடகரில் நானும் ஒருவன்.
>
> கணீரென்று ஆரம்பித்தேன். ''வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேறொன்று கொள்வாரோ!'' என்பதை. அப்போது என் பின்புறமாக, இதற்கு முன் வீதியில் நான் பார்த்த சில உருவங்கள் உட்கார்ந்திருந்தன. அவற்றில் ஒன்று 'ரவிவர்மா பரமசிவம்'.

வேணு நாயக்கர் ''இன்னும் பாடு, சுப்பு'' என்றார். நான் ''தொன்று நிகழ்ந்த தனைத்தும்'' என்ற பாட்டைப் பாடினேன்.

சபையில் இருந்தவர்கள் மொத்தம் 30 பேர்கள் இருக்கும். 30 பேர்வழிகளில் சுமார் 25 பேர்கள் நான் பாடும்போது அந்த ரவிவர்மா பரமசிவத்தையே பார்க்கிறார்கள்...

என்னை மேலும் பாடச் சொன்னார் வேணு நாயக்கர். பாடினேன்.

அப்போது வேணு நாயக்கர், ''அவுங்க ஆர் தெரியுமில்லை?'' என்று கேட்டார்.

தெரியாது என்று கூட நான் சொல்லி முடிக்கவில்லை. ரவிவர்மா படம்: ''நீங்க தமிழ் வாசிச்சிருக்கிங்களா?'' என்று என்னைக் கேட்டார்.

நான்: ''கொஞ்சம்.''

'படம்': ''உணர்ந்து பாடுகிறீர்கள்.''

வேணு நாயக்கர் அப்போது ''அவுங்க தானே அந்தப் பாட்டெல்லாம் போட்டது! சுப்பிரமணிய பாரதி என்று சொல்றாங்கல்ல?'' என்று 'பரமசிவப் படத்தை' எனக்கு அறிமுகப்படுத்தினார்.

எனக்கு நாணம், சந்தோஷம், பயம்.

இவ்விதம் ஒருவருக்கொருவர் அறிமுகமான பாரதியாரும் பாவேந்தரும் நெருங்கிப் பழகலாயினர். பாரதியின் வீட்டுக்கு அடிக்கடி போய்வந்த சுப்புரத்தினம் பாடல்களைப் பெயர்த்தெழுவது, பழைய பாடல்களைப் படிப்பது, இதழ்கள் — புத்தகங்களைப் படிப்பது, அங்கு நடைபெறும் உரையாடல்களையும் விவாதங்களையும் உற்றுக் கவனிப்பது என்று பல வழிகளிலும அறிவுப் பசியாறினார்.

ஒரு நாள். பாரதி அமர்ந்து எழுதும் கணக்குப்பிள்ளை மேசை எதிரில் சுப்புரத்தினம் அமர்ந்து எழுதிக் கொண்டிருப்பதை கவனித்த குயில் சிவா 'சுப்புரத்தினமும் அய்யர் போலவே உட்கார்ந்து என்னமோ எழுதுறாரப்பா!'' என்று கேலி செய்தார். இதற்கு பாரதி ''சுப்புரத்தினம் கவி எழுதக் கூடியவன்'' என்றார். ''அப்படியானால் ஒரு கவிதை எழுதச் சொல்லுங்கள் பார்ப்போம்'' என்றார்கள் மற்றவர்கள்.

''எங்கெங்கு காணினும் சக்தியடா'' என்ற பதினாறு வரிப்பாடலை எழுதி முடித்து பாடிக் காட்டினார் சுப்புரத்தினம். மகிழ்ந்தார் பாரதியார். வியந்தார்கள் நண்பர்கள்.

இந்தப் பாடலை பாரதியார் தாமே பெயர்த்தெழுதி, ''ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது'' என்று குறிப்பெழுதி 'சுதேசமித்திரன்' நாளிதழுக்கு அனுப்பி வைத்தார். வேறு எவரையும் பாரதியார் இப்படி அறிமுகப்படுத்தியதில்லை என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

1918 ஆம் ஆண்டில் பாரதியார் புதுவையை விட்டுப் புறப்படும் வரை அவருக்கு இணை பிரியாத் தோழனாய் இருந்து, காரியம் யாவிலும் கை கொடுத்தவர் பாரதிதாசன். பாடல் புனைவதிலும் பாடி மகிழ்வதிலும் மட்டுமல்ல, விடுதலைப் போராளிகளுக்கு— புகலிடம் நாடி வந்தவர்களுக்கும் சரி, களத்தில் நின்று தொடர்ந்து போராடி வந்தவர்களுக்கும் சரி — அனைத்து வகை உதவிகளும் செய்வதிலும் பாரதிக்கு வலக் கரமாய் விளங்கினார் சுப்புரத்தினம் என்பது மிகையன்று.

சுப்புரத்தினம் 1918 இல் தான் பாரதிதாசன் என்று புனைப்பெயர் சூடியதாகத் தெரிகிறது இது குறித்து 1961இல் பாரதிதாசன் எழுதினார்:

> ''நான் பாரதிதாசன் என்ற புனைப் பெயர் வைத்துக் கொண்டுள்ளேன். அதற்குக் காரணம்: அப்போது அவர் என்னுள்ளத்தில் முதலிடம் பெற்றிருந்தது தான். சாதிக் கொள்கையை நன்றாக— உண்மையாக எதிர்த்தவர் பாரதியார் தாம்! அவருக்கு முன் பன்னூற்றாண்டுகளுக்கு முன் அவ்வாறு சாதிக் கொள்கையை எதிர்த்தவரை நான் கண்டதில்லை. பாரதி எதிர்த்துப் பணிபுரியத் தொடங்கிய பன்னாட்களுக்குப் பின்னரே பெரியார் இயக்கம் தோன்றியது. பாரதியாரை நான் ஆதரித்ததும் பாரதிதாசன் என்று நான் புனைப்பெயர் வைத்துக் கொண்டதும் ஏதாவதொரு கூட்டத்தாரிடம் நன்மையை எண்ணியன்று. சாதி ஒழிப்பு விளம்பரம் ஆதல் வேண்டும் என்பதற்காகவும், பாரதியாரைப் போல எளிய நடையில் மக்களுக்கு இன்றைக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அடிமை வாழ்வுக்கு தேசஒற்றுமை

அன்னியச்சுவடுகள்
பதித்த
துப்பாக்கி நகங்கள்
உன் மேனியில்
படுகளப் பாலைவனங்களை
மட்டுமல்ல
முகலாவண்யங்களையும்
சிதைத்து
குருதித் தொட்டியில்
நீச்சல் பழக்கியது.
உன் அடிமைவாழ்விற்கு
தேச ஒற்றுமை வாசகம்
பொறிக்கப்பட்டதால்
இங்கு
உன்மேனியின்
ஒவ்வொரு நிகழ்விற்கும்
நியாய முத்திரை
பொறிக்கப்படுகிறது.
அகிம்சை நாமத்தால்
இரத்த தானமும்
மனிதப்பிணங்களும்
உன்னிடத்தில்
மலிவாகக்கிடைக்கிறது
உன் தனித்துவத்தை
சிறைப்படுத்தும்
தேசியத்தின் விலங்கினை
தகர்ப்பதற்கு
ஒரு கூட்டம்
இழப்புக்கள் மத்தியிலும்
இலக்கினை நோக்கியே
முன்னேறுகின்றது.

**ஜீ. எம். பரஞ்சோதி (ஈழம்)**

வேண்டிய கருத்தை வைத்துப் பாடல் இயற்ற வேண்டும் என்பதைப் புலவர்க்கு நினைவூட்ட வேண்டும் என்பதற்காகவுமே!''

பாவேந்தர் தம்மை பாரதிதாசன் என்று அழைத்துக் கொண்டதே தனிப்பட்டவர்கள் இன்று வரை பாரதியாருக்கு சூட்டியுள்ள புகழாரங்களில் எல்லாம் தலைசிறந்தது என்று தயங்காது சொல்லலாம்.

பாரதியார் மீது பாவேந்தர் கொண்ட காதல் பெயரளவோடு நின்று விடவில்லை. பாரதியாரின் கருத்தெல்லையைத் தாண்டி புதிய நோக்குகளை வரித்துக் கொண்ட பிறகும்கூட பாவேந்தர் அவர் மீது கொண்டிருந்த மதிப்பையும் நேசத்தையும் சற்றும் குறைத்துக் கொண்டாரில்லை. அது மட்டுமல்ல. பாரதியாரைக் குறைவு படுத்த முயன்றவர்கள் பாவேந்தரின் சொற்கணைகளுக்குத் தப்பியதில்லை. ஒரு முறை கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி ''பாரதியார் உலக கவியல்ல'' என்று எழுதிவிட்டார். கொதித்தெழுந்து பதிலளித்தார் பாவேந்தர் :

பாரதியார் உலக கவி!— அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாய்ந்தோர்!
ஒருருக் கொரு நாட்டுக் குரிய தான
ஒற்றைச் சாண் நினைப்புடையர் அல்லர். மற்றும்
வீரர் அவர்!—மக்களிலே மேல் கீழ் என்று
விள்ளுவதைக் கிள்ளி விடவேண்டும் என்போர்!
சீருயர்ந்த கவிஞரிடம் எதிர்பார்க்கின்ற
செம்மை நலம் எல்லாமும் அவர்பாற் கண்டோம்!

பாவேந்தரின் இறுதித் தீர்ப்புரை இதுதான்:

அழகொளி சேர் பாரதியார் கவிதை தன்னை
அறிந்திலதே புவி என்றால் புவிமேற் குற்றம்

பாவேந்தரின் சொற்கள் ஒருவரைப் போற்றுகையில் மலராய்ச் சொரியும்: தூற்றுகையில் குத்தீட்டிகளாய்ப் பாயும். ஒரு சமயம் மலர்களால் அர்ச்சிக்கப்பட்டவரே பிறிதொரு சமயம் குத்தீட்டிகளால் துளைக்கப்படுவது சகஜமாய் இருந்தது. அரசியலிலும் கருத்தியலிலும் பாரதிதாசனின் ஆசான் எனத்தக்க பெரியார் அவர்கள்கூட இதற்குத் தப்பினாரில்லை இந்த விதிக்கு விலக்காய் அமைந்த ஒரே ஒருவர் பாரதியார்தாம். விமர்சிக்கத் தக்கனவற்றுக்காகவும் கூட (எடுத்துக் காட்டு: கடவுள் கொள்கை) அவரைப் பாவேந்தர் விமர்சித்ததே கிடையாது.

பாவேந்தர் தமது வாழ்நாளில் கடைசியாக (1964) மேற்கொண்ட பெருமுயற்சி பாரதியார் வாழ்க்கையைத் திரைப்படமாக்க வேண்டும் என்பதே. ''திரைப் படத்தில் மகாகவி பாரதி'' என்கிற விண்ணப்பத்தை தமிழ்ச் சான்றோர்களுக்கு அனுப்பி உதவி வேண்டினார். அந்த விண்ணப்பத்தின் முடிவில்

''எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!!

என்று அழைப்பு விடுக்கிறார். அந்தோ! அப்பெருந்தொழில் ஈடேறு முன்பே அவரது காலம் முடிந்து போனது!

[கட்டுரை முடியவில்லை; அடுத்த இதழில் தொடரும்] □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கலை என்பது எளிதில் இனங்காண முடியாதது

□

சி. எம். முத்து

1987களின் முடிவில் நமக்கும் தமிழுக்குமாய் கிடைத்தது 'வண்ணங்கள் வடிவங்கள். அறிமுகப்படுத்தியது தேனுகா.

இலக்கியம்; நவீன இலக்கியம்; ஓவியம்; நவீன ஓவியம் என்ற இரண்டு அடிப்படையான விஷயங்களிலும் அதிகமாய் நம்மை தொந்தரவு படுத்திக் கொண்டிருக்கிற ஒரு விஷயம் புரியமுடிந்தது — புரியமுடியாதது. ஒருவருக்கு புரிந்தது மற்றொருவருக்கு புரியாதது; மற்றொருவருக்கு புரிந்தது வேறொருவருக்கு புரியாததெப்படி என சாத்தியப்படுத்திக் கொள்ள முடியவில்லை. இந்த விஷயங்களை தெரிந்து கொள்வதற்கு முன்னால் புரியமறுக்கிற அல்லது புரியாதது பற்றி எல்லாம் எழுகிற கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் தேனுகாவின் 'தோற்றம் பின்னுள்ள உண்மைகள்' பதிலாய் அமைந்து விடுகிறது.

தேனுகா ஞானக்கூத்தனின்—சூரியனுக்குப் பின்பக்கம் கவிதையை நமக்குக் காட்டி அதற்கு விளக்கம் தருகிறபோது திவசக்கவிதை எல்லாருக்கும் அர்த்தம் புரிந்ததான கவிதையாய் விடுகிறது. கவிதையின் ஆழத்தில் நாம் சிக்கித் தவிக்கும்போது நம்மையெல்லாம் கரையேற்றுகிறவராய் தேனுகா ஆகிறார்.

நுண்மை என்பது வெகு ஆழத்திலிருப்பது. அறியமுடியாதது, ஞானம் போன்ற சக்தி கொண்டது; அதை உணரவோ நுகரவோ நாமும் அதன் ஆழத்திற்குப் போகவேண்டியதுதான். யாரும் யாரின் அகவுலகை புரிந்து கொண்டுவிட்ட மாத்திரத்தில் உலகின் சூட்சுமங்களையும் புரிந்துகொண்டதாகி விடும்.

புதுக்கவிதை (Modern Poetry) நவீன இலக்கியம் (Modern Literature) நவீன ஓவியம் (Modern Art) புரியாதற்காய் குழம்புகிறவர்கள் ஒன்றை புரிந்து கொள்ளவேண்டும், புதுசென்பது சற்று புரிய மறுக்கிற, குழப்புகிற, எரிச்சலூட்ட வைக்கிற—ஆனாலும் ஆழமாய் சிந்திக்கவைக்கிற— ஒன்றென்பதை யாரும் நிராகரித்து விடமுடியாது.

நேற்றைய புதுசுதான் இன்றைய பழசு. இன்றைய புதுசுதான் நாளைய பழசு. புதானறின எதுவும் புதுசாயிருந்துதான் பழசாகியிருக்கிறது. பழசாக எதுவும் தோன்றி விடவில்லை. அப்படி தோன்றவும் முடியாது.

இன்றைக்கு 'நவீனம்' என்று சொல்லுகிற ஒரு வார்த்தைப் பிரயோகம் நாளைக்கு 'அதி நவீனம்' என்று சொல்லப்படுகிற சூழ்நிலைகளும் காலமும் வரலாம். இப்போதே கூட அப்படி சொல்லப்பட்டு வருவதை நாம் அறிந்தோ உணர்ந்தோகூட இருக்கமுடியும். மனிதனும் நாகரிகமும் மிகவேகமாய் வளர்ந்து கொண்டிருக்கிற இக்கால கட்டத்தில் நவீனமும் அதிநவீனமும் இன்னும் உச்சமாய் சொல்லத்தக்க அளவில் 'மின்னல்' போன்ற ஒரு வார்த்தைப் பிரயோகம் இருக்குமானால் அதுவும் தமிழுககும் வேறு எந்த மொழிகளுக்கும் உடனடித்தேவை என்பதை நாம் கொள்ளலாம் இவைகளை நாம்ஓரளவுக்கு அனுமானித்துக் கொண்டுவிடும் பட்சத்தில் 'புரிந்தது' 'புரியாதது' இரண்டுக்கும் பொருள் காண முடியும்.

ஞானக்கூத்தனின் கவிதை தோற்றத்தை வைத்து அதன் பின்புலத்திலுள்ள உண்மைகள் எதுவென்று தேனுகாவின் மூலமாக விளக்கம் பெறும்போது குபீரென்றொரு இன்பம் நம்மை ஆட்படுத்தி விடுகிறது. அந்த க்ஷணத்தில் நாம் மறுபடியும் மறுபடியும் ஞானக்கூத்தனின் தோற்றக் கவிதையை ரசிக்கிறோம். பின்னாலுள்ள உண்மைகளையும் ரசிக்கிறோம்.

'அணு' என்று சொல்கிறார்களே அந்த சின்ன துளி நேரங்களிலேயே மனிதக் கண்களுக்கோ கற்பனைகளுக்கோ எட்டாத, உலகில் எத்தனை எத்தனை கோடியோ மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு விடுகின்றன.

மாற்றங்களை விரும்பாதது போல் பம்மாத்து பண்ணிக் கொண்டு நம்மையும அறியாமல் நிகழ்ந்து கொண்டிருக்கிற மாற்றங்களை விரும்புகின்றோம். இநத ரீதியிலேயே தன்னுடைய ஊருக்கு முதன முதலாக வந்த காரையோ ரயிலையோ பார்த்த மனிதன் உற்சாகப்பட்டான் சந்தோஷப்பட்டான்.

முதன் முதலாக பார்க்கிற எதுவும் அச்சப்படவைக்கிறது. பயம் கொள்ள வைக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உற்சாகப்படுத்துகிறது. ஆச்சரியப்பட வைக்கிறது. பறவைகளைப் பார்த்து விமானம் உண்டானதாகவும், மீன்களைக் கண்டவன் படகினை உண்டாக்கினதாகவும் பாட்டாய் பாடினான்.

உலகில் மாறுதல்கள் நிகழ நிகழ கற்பனைகள் விரிகின்றன. ஆசைகள் அதிகரிக்கின்றன. ஆசைகளின் அதிகரிப்பினாலும் கற்பனைகள் விரிவதின் மூலமாகவுமே இன்றைக்கு நமக்கு நவீனமும் அதிநவீனமும் தேவையாய்படுகிறது. உலகில் தோன்றிய ஒவ்வொருத்தருக்கும் ஆசைகள் அற்றுப்போயிருக்கும் பட்சத்தில் இன்றைக்கு எங்கே நாம் புதுப்புது சிந்தனைகளையும் நூதனங்களையும் பார்க்க முடிந்திருக்கும்! ஓங்கி வளர்ந்த மண் மேடுகளைத்தான் பார்க்க முடிந்திருக்கும் மாறுகின்ற உலகில் மாறாத மனிதன் இல்லை. மாற்றம் அவனறியாமல் அவனுணராமலேயே நிகழ்ந்து கொண்டுதானிருக்கிறது. பறையர்கள் ஒலிக்கும் தப்பொலிகளை கேட்டால்-மிக நுண்மையாய் கூர்ந்து உணர்தலின் மூலம்-நாம் நினைக்கிறதையெல்லாம் அது சொல்வது போலிருக்கும். நாம் நினைக்கிறதை எப்படி அது பேசுகிறது என்று ஆச்சரியப்படாத மனிதர் இல்லை. நிலாவினில் தெரியும் நிழலினுள் நாம் நினைக்கிற உருவங்களையெல்லாம் அது காட்டுவது போலிருக்கும். நட்சத்திரக் குவியல்களில் பறக்கும் பறவை போலவோ, சிங்கம் போலவோ, சிங்கவாய் போலவோ, மயில் போலவோ, நாட்டியமாடுகிறது போலவோ மனதுக்கும் கற்பனைக்கும் என்னவெல்லாம் தோன்றுகிறதோ அதெல்லாம் ஆகிறது போல நமக்குத் தோன்றும். எதையும் உணர்தலின் மூலமே ரசிப்பு விரிந்து படுகிறது. கலையும் கலைசார்ந்த ஏதுவும் உணர்தலின் மூலமே தான் காட்சிக்குட்பட்டு ரசனையாகிறது! கலையாகிறது.

'பியத்மொந்திரியானின் வண்ணக் குறைப்பும் வடிவக்குறைப்பும்' என்றொரு கட்டுரை, 'கலையை ஆதரிப்பவர்கள் பூர்ஷ்வாக்களே என்பதனால் கலையை அழிக்கப் புறப்பட்டதொரு கும்பலுக்குப் பெயர் 'டாடாயிஸ்டுகள்.' 'ரெம்ப்ரண்டின்' விலையுயர்ந்த ஓவியங்கள் அனைத்தும் அரண்மனைக்குச் சொந்தமானதென்று அதன்மீது சலவை செய்யப் புறப்பட்டார்களாம். பிரான்சில் தோன்றிய இந்த டாடாயிஸ்டுகள் தங்களுக்குப் பிடிக்காத ஓவியங்களை சுத்தியல் கொண்டு நொறுக்கும்படி வேண்டினராம். ஓவியக்கண்காட்சி யொன்றை காண நாறித்தொலைக்கும் பொதுக்கழிவறை வழியாக வரவேற்கப் பட்டனராம். கடைசியில் கலையை மூர்க்கமாக எதிர்த்த டாடாயிஸ்டுகள் கலாபூர்வமான சாதனை ஏதும் செய்யாமலேயே சிசுமரணமடைந்ததுபோல் டாடாயிஸம் அழிந்து போய் விட்டதாம்.

மனித முயற்சிகளில் கலை முயற்சியை ஓர் அதியற்புத முயற்சியாக ஏற்பதற்கில்லையென்று சொன்னவர் ஹாலந்து ஓவியர் மொந்திரியான். "கலைஞனை உயர்வாக நினைக்க அவனிடம் என்ன இருக்கிறது" என்றாராம்.

இது நமக்கு உடன்படுகிற விஷயமாயில்லை.

உலகம் தோன்றிய ஷணத்திலிருந்தே கலைகளும் தோன்றிவிட்டன. கலை வெளிப்பாட்டுணர்வின் மூலமாகவே இவ்வுலகில் தோன்றிய, தோன்றிக் கொண்டேயிருக்கிற அத்தனை மாறுதல்களும் நிகழ்ந்ததும் நிகழ்ந்து கொண்டுமாய் இருக்கிறது. இது மொந்திரியானுக்கு தெரியாததேனோ தெரியவில்லை.

டாடாயிஸ்டுகள் மாதிரி நாம் கலையைப் பார்த்து பயம் கொள்ளவேண்டியதில்லை. அச்சப்படவேண்டியதில்லை.

'கலை' மனிதனால் மனிதனுக்குண்டானது. கலை மனிதனை மயக்கத்திலாழ்த்துவது. ஆச்சரியங் கொள்ள வைப்பது, சந்தோஷப்படச்செய்வது, நுண்மையான அறிவு கொண்டு செதுக்கப்படுவது பிரபஞ்சத்தின் 'ஒளி'யெனத் திகழ்வது பேரருளைத் தேடுவது. பிரக்ஞைகளின் மையிருளைத் துளைத்துக் கொண்டு பட்டொளியைவீசுவது. வாழ்வே கலை. கலையே வாழ்வென கொள்வது.

நாம் 'வேண்டாம் சனியன் ஒழியட்டும்' என்று குப்பையில் கிடத்திய மக்கி உலுத்து செல்லரித்துப்போன தகரத்துண்டுகள் சந்தான ராஜீவுக்கு கலையாகிறது.

*மனிதனை மனிதனாகப் பார்க்க 'கலை' அவசியமில்லை மனிதனே போதும்!*

மனிதன் நூதனமான கலைகளில் தேடுவதும் தேடப்போவதும் சட்டென்று புரியாத, இனங்கண்டு கொள்ள முடியாத பற்பல கற்பனைகளை உண்டாக்கக் கூடிய ஆழமான உலகைதான்.

உலகம் உள்ளவரை தேடுதல் தொடரப் போவது போலவே—தேடுதல்களின் மூலமாகவே உலகம் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதுபோல—தேடுதல்களின் மூலமாகவும் ஆழமான சிந்தனை வேண்டுதல்களின் மூலமாகவும் உலகின் பிரக்ஞையினின்று தப்ப முடியாத நூதனமான கலைகளின் மூலமாகவும்—புரியா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தது—புரிந்து கொள்ளவே முடியாதது—வியக்கத்திலாழ்த்துவது பிரபஞ்சத்தில் தோன்றப்பட்ட எல்லா அறிவு ஜீவாத்மாக்களுக்கும் அதனதன் அறிவினுட் புகுந்து பிரவாகமாய் பொங்கிப்புரண்டு ததும்ப வைப்பதும் செழுமைப் படுத்துவதுமான கலைகளை நேசிப்பதென்பதன் தாக்கங்கள் உண்டாவது அதன் அடர்த்தியான வடிவினுட் புகுந்து கிளையோடியிருக்கிற ஆழமன விருட்சங்களின் படிமங்களை நுகரும்போது நாம் சிலிர்த்தெழுந்து கலைகளைத் தேடுவோம்.

கலை என்பது எளிதில் இனங்காண முடியாதது, தன்னகத்தே வலுவான ஒன்றை அடக்கிக் கொண்டிருப்பது.

இப்புத்தகம் பல நவீன ஓவியக் கலைஞர்களின் நுட்பங்களையும் கலைகளையும் ஆழமாகவே நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறது. வண்ணங்கள் வடிவங்கள் மூலமாக தேனுகா நமக்கு காட்டுவது முற்றிலும் புத்தம் புதியதான கலைகளையே. யாருக்கும் புரியாதென்று நினைக்கிறதை புரியப்படுத்துகிறார். பழைய மரபுகளுக்கோ பாரதிக்கோ எதிரீடானவர் அல்ல அவர், மரபைக் கற்று புது உலகு காண புறப்பட்டிருக்கிறவர். அவர் காட்டுகிற அந்த ஸ்தூலமான உலகம் நமக்கும் இனிக்கக் கூடியதும் வரவேற்க தக்கதாவுமிருக்கிறது 'டாக்ஸிடெர் மிஸ்டுகள்' என்ற கட்டுரையில் அவர் சொல்கிற மாதிரி ஐரோப்பியச் சிங்கங்களைப் போல் காட்சிப்பொருளாக வேண்டிய அவசியமில்லை. டாக்ஸிடெர்மிஸ்டுகள் நம்மை உரித்து தோலைப் பதப்படுத்த காட்சிப் பொருளாக்க வேண்டாம். மரபையும் பழமையையும் மீறாமல் மீறி புது உலகுகாணப் புறப்படுவோம்.

தமிழகத்தின் முன்னோடி நவீன ஓவியர்களான சந்தானராஜ், சி. அரங்கராஜன். அல்ஃபான்சா, கங்காதரன், ஜீ. இராமன் போன்றோரின் கோட்டோவியங்களும் தைல வண்ண ஓவியங்களும் புத்தகம் முழுக்க நிறையவே இடம் பெற்றுள்ளன. 'இராஜரத்னத்தர்பார்' என்ற கட்டுரையும், ஆன்ம ஒத்தடங்கள்' என்ற கட்டுரையும் நவீன உத்திகளை ஓரளவுக் காவது இனங்கண்டு கொள்ள போதுமான தகவல்களை கொண்டிருப்பதாகத்தான் கொள்ள வேண்டும். உயர்வான விஷயங்களை உள்ளடக்கிய கட்டுரைகள் அவையிரண்டும்.

புரியாதது புரியும்போதும் தேடுதல்கிடைக்கும்போது மட்டுமே மனிதனுக்கு வியக்கத்தக்க அளவிலான இன்பநுகர்ச்சி ஏற்படும். அந்த இன்பமயமான நுகர்ச்சியை மனிதன் அனுபவிக்கத் தயாராக இருக்கும் பட்சத்தில் மனிதனுக்கு தேடுதல் கிடைக்காமலும், புரிதல் புரியாமலும் இருப்பதுதான் நல்லது.

நூறு மனிதர்கள் நூறு கருத்துக்களை கொண்டிருந்தாலும் அவர்களின் தேடுதல் என்னவோ ஒன்றே ஒன்றை நோக்கித்தான். கண்களுக்கும் கற்பனைக்கும் புலப்படாத எண்ணற்ற புள்ளிகளின் இடையேயான புள்ளியொன்றினை நோக்கித்தான் என்னும் பிரபஞ்ச சூட்சுமம் புரியாமல் புரிதலுணர்த்தும்—

இது எல்லாருக்கும் புரியும்போதும் தேனுகாவைப் புரியும், அவர் எடுத்ததைப் புரியும். அவர் எழுப்பியுள்ள குரல் புரியும். நவீன ஓவியமும் நவீன இலக்கியமும் நவீன கலைகளும் புரியும். □

---

சரித்திரம் நிறைய எழுத்து
ரத்தம்

□

உப்பிலாக் கஞ்சி குடிக்கும்
குப்பம்.
தொட்டுக்கொள்ள நிலவு

□

அபசாரம்.
ஆண்டவனுக்குச் சமர்ப்பிக்கப்போகிற
குடைக்கீழ்
மனிதன்.

□

விரல்தோறும் மோதிரங்கள்.
யாருடைய தாலிகள்?

□

தலை நிறையக் கண்ணீர்.
முகத்தில் பவுடர்.

□

ரொம்பப் பசிக்கிறதோ?
இதோ
எட்டாம் திட்டம்.

□

—நீலமணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



□

''அமெரிக்காவினுடையநிர்பந்தங்களிலிருந்து விடுபடுவதற்காக சான்டினிஸ்ட்டா அரசாங்கம் பொருளாதாரத்துறையில் மேற்கொண்ட சமரச நடவடிக்கைகள் அரசியல் ரீதியான பெரும் இழப்பை ஏற்படுத்தின. இத்தகையதொரு பாதக மான சூழ்நிலையில் தேர்தலை நடத்த சான்டி னிஸ்டா அராசங்கம்முடிவு செய்ததுவிவேகமான செயல்தானா என்ற கேள்வி எழுகிறது. இந்த வேதனைமிக்க அனுபவங்களிலிருந்து உலகப் புரட்சியாளர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள்...''

# அரசியல் அதிகாரம் புரட்சியாளர்களிடம் இருக்க முக்கிய உற்பத்தி சாதனங்கள் எதிர்ப்புரட்சி வர்க்கங்களின் கட்டுப்பாட்டில் இருந்தன

**எஸ். வி. ராஜதுரை**

நிகராகுவாப் புரட்சியின் தனித்தன்மை பற்றிய மிகச்சிறந்த வாசகத்தைக் கூறியவர் சான்டினிஸ்டாத் தலைவர்களில் ஒருவரான ஓர்லாண்டோ நுனெஸ் (Orlando Nunez). கிழக்கு ஐரோப்பியப் ''புரட்சி'' அலைகள் பெர்லின் சுவரைத் தரைமட்டமாக்கியதை யொட்டி சென்ற டிசம்பர் மாதம் அவர் கூறினார்; ''எங்களைப் பொறுத்தவரை பெர்லின் சுவரின் வீழ்ச்சி எந்த முக்கியத்துவமும் அற்றது. ஏனெனில் 'சுவர்' ஒன்று இல்லாமல் தான் நிகராகுவாப் புரட்சி பிறந்தது.'' ஆனால் இரண்டு மாதங்களுக்குப் பிறகு நடந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் சான்டினிஸ்டா தோல்வியடைந்தபோது அந்நாட்டின் தலைவர் டேனியல் ஓர்டெகா (Daniel Ortega) கண்ணீர் மலகக் கூற முடிந்தது இதைத்தான் : ''நமது மனத்திற்கு இதம் தருகிற ஒரு நேர்மையான, தூய்மையான தேர்தலை உத்திரவாதம் செய்வதுதான் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தில் நிகராகுவாப் புரட்சியாளர்களாகிய நாம், சான்டினிஸ்டாக்களாகிய நாம், நிகராகுவா மக்களுக்கு வழங்கக்கூடிய முதன்மையான பங்களிப்பு ஆகும்.''

நிகராகுவாப் புரட்சி அரசாங்கத்துக்கு ஏற்பட்ட தோல்வி, அந்நாட்டுப் புரட்சிக்கு மட்டுமல்லாமல். லத்தீன் அமெரிக்க மற்றும் உலகெங்குமுள்ள புரட்சி இயக்கங்களுக்கு ஏற்பட்ட மாபெரும் பின்னடைவாகும். பத்தாண்டுக்கால அமெரிக்கப் பொருளாதார முற்றுகை; அதன் கைக்கூலியான கான்ட்ராஸ் (Contras) என்ற எதிர்ப்புரட்சிப் படையின் இடைவிடாத காட்டுமிராண்டித்தனமான தாக்குதல், சோவியத் யூனியன் தனது பொருளாதார உதவிகளை நிறுத்தியமை; இவற்றின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார சீர்குலைவு; சாவையும் வறுமையையும் பற்றாக்குறையையும் தவிர வேறெதையும் அன்றாட வாழ்வில் காணமுடியாத மக்களிடையே ஏற்பட்ட விரக்தி இவற்றின் காரணமாகவே ஒரு மாற்று அரசாங்கத்தை மக்கள் விரும்பினார்கள் என்ற பொதுவான விளக்கம் இடதுசாரிகளால் தரப்பட்டு வருகிறது. ஆனால் இந்த விளக்கத்தில் ஓரளவே உண்மை இருக்கிறது.

உலகம் முழுவதிலுமிருந்து சென்ற 2500 பார்வையாளர்களின் கீழ் (ஐ. நா. வின் பிரதிநிதிகள், அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டர் ஆகியோர் இவர்களில் அடங்குவர்) நடந்த பிப்ரவரித் தேர்தல், மேற்கு நாடுகள் உள்ளிட்ட எந்தவொரு நாட்டிலும் காண

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடியாத மிக உயர்ந்த ஜனநாயகத் தன்மை வாய்ந்த தேர்தலாகும் என்பதில் ஐயமில்லை. சில மாதங்களுக்கு முன் டேனியல் ஓர்டெகாவை ஒரு குரங்கு என்று வர்ணித்த அமெரிக்க அதிபர் புஷ், நிகராகுவாத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியை ஜனநாயக உணர்வோடு ஒப்புக்கொண்ட ஓர்டெகாவுக்குப் பாராட்டுத் தெரிவித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அரசு அதிகாரத்தைத் தன் கையில் வைத்துக்கொண்டிருந்த சான்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி (FSLN) எந்தவொரு முதலாளித்துவ ஜனநாயக நாட்டிலும் இல்லாத தேர்தல் விதிகளை நடைமுறைப்படுத்தியது. அவற்றில் சில: (1) தலைமை தேர்தல் குழுவிலிருந்து (Supreme Electoral Commission) எல்லாக் கட்சிகளும் தேர்தல் செலவுக்கான நிதியைப் பெற்றுக் கொள்ளலாம்; (2) எந்தவொரு கட்சியும் வெளிநாடுகளிலிருந்து தேர்தல் நிதியை சட்ட ரீதியாகவே பெற்றுக் கொள்ளலாம் ஆனால் இவ்வாறு பெறப்படும் வெளிநாட்டுப் பணத்தில் 50% தலைமைத் தேர்தல் குழுவிடம் ஒப்படைக்கவேண்டும். இத்தொகை நியாயமான முறையில் குழுவால் கட்சிகளுக்கு விநியோகிக்கப்படும். (3) இந்தக் குழுவில ஐந்து உறுப்பினர்கள் இருப்பர்; இருவர் சான்டினிஸ்டாக்கள், இருவர் எதிர்க்கட்சியினர், ஐந்தாவது உறுப்பினர் இரு தரப்பாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட 'நல்லெண்ணம் கொண்டவர்' (4) தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் எல்லாக் கட்சிகளுக்கும் சரிசமமான வாய்ப்பு; இது தவிர கட்டணம் செலுத்திக் கூடுதலான நேரத்தை வாங்கிக் கொள்ளலாம்.

இத்தகையதொரு ஜனநாயகத் தேர்தலில் தாங்கள் வெற்றிபெற்று விடுவோம் என்று சான்டினிஸ்டாத் தலைவர்கள் கருதினர். ஏனெனில் ஓர்டெகா போன்ற சான்டினிஸ்டாத் தலைவர்களின் தனிப்பட்ட செல்வாக்கு, நிகராகுவா நாட்டிற்காக அக்கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்த தியாகங்கள், அவர்களது ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு ஆகியன வெற்றியை ஈட்டித்தரும் என்று நினைத்தனர். ஆனால் ஓர்டெகா பெற்ற வாக்குகள் 41.5%. மாவோயிஸ்டுகள் உள்ளிட்ட 14 கட்சிக் கூட்டணியான ஐக்கிய தேசிய எதிர்ப்பியக்கத்தின் (UNO) தலைவர் திருமதி வயலெட்டா ஷமாரோ பெற்ற வாக்குகள் 54.8%. மக்களின் தீர்ப்பை மதித்து அரசாங்க அதிகாரத்தைத் திருமதி ஷமாரோவிடம் நிபந்தனையின்றி ஒப்படைப்பதாகக் கூறியுள்ளார் ஓர்டெகா. ஆனால் சான்டினிஸ்டாக்களின் கட்டுப்பாட்டிலுள்ள இராணுவம், குடிப்படை, காவல்துறை நீதித் துறை முதலியனற்றைக் கலைக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ அவரும் பிற தலைவர்களும் ஒப்புக்கொள்வார்களா என்பது தெரியவில்லை. அமெரிக்காவின் ஆதரவைப் பெற்ற ஷமாரோ வெற்றிபெற்று விட்டதால் அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை ஏகாதிபத்தியம் விலக்கிக் கொள்ளப் போகிறது.

தேர்தலில் சான்டினிஸ்டாக்களுக்கு ஏற்பட்ட தோல்விக்கான காரணங்களை ஆராய்வதும், பிப்ரவரியில் தேர்தல் நடத்தியது விவேகமிக்க செயல்தானா என்ற கேள்வியை எழுப்புவதும் உலகிலுள்ள புரட்சியாளர்களின் கடமைகளாகின்றன. அமெரிக்காவின் பொருளாதார முற்றுகையின் காரணமாகவும் கான்ட்ராஸ் எதிர்ப்புரட்சியாளரின் தாக்குதல்களின் காரணமாகவும் யாராலும் கட்டுப்படுத்த முடியாத பணவீக்கம் ஏற்பட்டது. சிறார் மரண விகிதம் பன்மடங்கு உயர்ந்தது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிர்ப்பந்தகளிலிருந்து விடுபடுவதற்காக சான்டினிஸ்டா அரசாங்கம் பல்வேறு வகையான விட்டுக் கொடுப்புகளைச் செய்தது. லத்தீன் அமெரிக்கப் புரட்சி இயக்கங்களுக்கு குறிப்பாக எல் சால்வடோரில் உள்ள FMLN என்ற அமைப்புக்குத் தான் வழங்கி வந்த ஆதரவுகளை நிறுத்தியது. அங்குள்ள அமெரிக்க ஆதரவுப் பிற்போக்காளரான கிறிஸ்டியானியின் அரசாங்கத்தை அங்கீகரித்தது. பணவீக்கத்தைச கட்டுப்படுத்துவதற்காக அது மேற்கொண்ட நடவடிக்கைகள் பாட்டாளிகளின் வாழ்க்கைத் தரத்தைப் பாதித்தது. பொதுத் துறையிலிருந்த பல தொழில்களை அரசாங்கம் தனியார் துறைக்கு மாற்றியது. நிலப்பறிமுதல் கைவிடப்பட்டு 'திறமை வாய்ந்த' நிலவுடைமையாளர்களிடம் முன்பு கைப்பற்றப்பட்ட நிலம் ஒப்படைக்கப்பட்டது. நிலச் சீர்திருத்தத்தினால் பயனடைந்து வந்த சிறு விவசாயிகளுக்கு இது ஆத்திர மூட்டியது. 1988 இல் பறிமுதல் செய்யப்பட்ட தனியார் தொழிற்சாலைகள் அத்தொழிலபதிர்களிடமே மீண்டும் ஒப்படைக்கப்பட்டு, ஏற்றுமதியில் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியை அவர்களே வைத்துக்கொள்ள அனுமதி தரப்பட்டது. தொழிலாளர்களின் ஊதிய உயர்வு நிறுத்தப்பட்டது. சான்டினிஸ்டா அரசாங்கம் தொடக்கம் முதல் கடைப்பிடித்து வந்த 'கலப்புப் பொருளாதாரக்' கொள்கையின் நீட்சியாகவே இந்த சலுகைகள் இருந்தன. விவசாயப் பொருட்களின் மற்றும் அவற்றைக் கொண்டு தயாரித்த பண்டங்களின் ஏற்றுமதி தனியார் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. அவர்களுக்கு மானியங்களும் வழங்கப்பட்டன. இந்த மானியங்களைப் பயன்படுத்திக்கொண்ட ஏற்றுமதியாளர்கள், ஏற்றுமதியின் மூலம் கிடைத்த டாலர் போன்ற அந்நியச் செலா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வணியை வெளிநாட்டுக்கு அனுப்பினர். சொந்த நாட்டில் முதலீடு செய்யவில்லை. அதே நேரத்தில் எதிர்ப்புரட்சி சக்திகளுக்கு நிதியுதவி செய்து வந்தனர் இவ்வாறு நாட்டின் மூலவளங்களை இவர்கள் உறிஞ்சிக் கொண்டதால் சிறு அளவிலான உற்பத்தித் திட்டங்களுக்கான நிதியொதுக்கீடு மிகவும் குறைக்கப் பட்டது. மாற்றுப் பொருளாதாரம் கட்டமைப்புகள் உருவாக வழியில்லாமல் போய் விட்டது. இது ஒரு முரண் நிறைந்த சூழலைத் தோற்றுவித்தது. அரசியல் அதிகாரம் புரட்சியாளர்களிடம் இருக்க, முக்கிய உற்பத்தி சாதனங்கள் எதிர்ப்புரட்சி வர்க்கங்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. விட்டுக்கொடுக்கப் போவது யார் என்ற பிரச்சினை நீண்ட காலமாகவே நிலவி வந்தது.

சுரண்டும் வர்க்கங்களைப் பொறுத்தவரை அச்சுறுத்தல்கள், நிர்ப்பந்தங்கள், சலுகைகள் என வெவ்வேறு யுக்திகளைக் கையாண்டு வந்த சான்டினிஸ்டா அரசாங்கம் கடந்த 5 ஆண்டுகளாக சலுகைகளுக்கே முதன்மை வழங்கத் தொடங்கிற்று. இத்தகைய கலப்பு பொருளாதாரக் கொள்கையால் பொருளாதாரத்துக்கு மட்டுமல்லாமல் அரசியவுக்குமே பெரும் கேடு பயத்தது. நிகராகுவா அரசாங்கத்திடமிருந்தும் சி.ஐ.ஏ.விடமிருந்தும் மான்யங்கள் பெற்று வந்த முதலாளியக் கும்பல் இழந்துபோன தனது மேலாதிக்கத்தைத் திரும்பப் பெறுவதற்காக தாக்குதலைத் தொடுக்கத் தயாராகி வந்தது. அமெரிக்காவின் பொருளாதார முற்றுகையை அகற்றுவதற்காக வெளிநாட்டுக் வங்கிகளுக்கும் அமெரிக்காவிற்கும் சான்டினிஸ்டா அரசாங்கம் வழங்கிய சலுகைகள் பலனளிக்கவில்லை. மாறாக சமோசா வாங்கிய கடன்களையும் சேர்த்துத் திருப்பி தரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தரப்பட்டு வந்த ஊக்குவிப்பு கடந்த ஐந்தாண்டுகளாக மெல்ல மெல்லக் கைவிடப்பட்டு தடையற்ற சந்தையை அரசாங்கமே ஊக்குவிக்கத்தொடங்கியதுஇதன் காரணமாக கள்ளச் சந்தை, வர்த்தக சூதாட்டம் ஆகியன அதிகரித்தன. மேலும் அரசாங்கம் மேற்கொண்ட சிக்கன நடவடிக்கைகளின் காரணமாக தொழிலாளர்கள், வெள்ளை காலர் ஊழியர்கள், கிராமபுற,மற்றும் நகர்புற ஏழைகள் ஆகியோரின் ஊதியவிகிதம் உயர்த்தப்படாமையால் அவர்கள் மிகவும் பாதிக்கப் பட்டனர். சுருக்கமாக சொல்லப் போனால் உழைக்கும் மக்களின் கணிசமான ஆதரவை சான்டினிஸ்டா அரசாங்கம் இழந்து விட்டது.

அமெரிக்காவினுடைய நிர்பந்தங்களிலிருந்து விடுபடுவதற்காக சான்டினிஸ்டா அரசாங்கம் பொருளாதாரத் துறையில் மேற்கொண்ட சமரச நடவடிக்கைகள் அரசியல் ரீதியான பெரும் இழப்பை ஏற்படுத்தின. இத்தகையதொரு பாதகமான சூழ்நிலையில் தேர்தலை நடத்த சான்டினிஸ்டா அரசாங்கம் முடிவு செய்தது விவேகமான செயல்தானா என்ற கேள்வி எழுகிறது. இந்த வேதனை மிக்க அனுபவங்களிலிருந்து உலகப் புரட்சியாளர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய படிப் பினைகள்:

1. புரட்சி அரசாங்கத்தின் நீண்ட கால சமூக—பொருளாதாரக் கொள்கை, புரட்சியின் ஆதரவு சக்திகளின் நலன் களுக்கு ஒத்திசைந்ததாக இருக்க வேண்டும். **புரட்சிக்கு ஆரம்பத்தில் ஆதரவு காட்டிய பரந்துபட்ட மக்கள் என்றென்றும் அதே ஆதரவை வழங்கி வருவார்கள் என்று கருதி புரட்சிகரத் தலைவர்கள் தனிப்பட்ட முதலாளிகளையோ. சர்வ தேச வங்கிகளையே அணைத்துக் கொள்ள முடியாது.**

2. உள்நாட்டில் உள்ள உழைக்கும் வர்க்கம், நேச வர்க்கங்கள் ஆகியவற்றின் நலன்களுக்கே முதன்மை தரவேண்டுமே அன்றி, வெளிநாடுகளில் உள்ள தாராளவாத, மற்றும் சமூக ஜனநாயகவாதிகளின் கோரிக்கைகளுக்கும் நிர்பந்தங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் அல்ல.

3. அன்னிய நாடுகளின் நிதிகளைக் கொண்டு இயங்கும் அரசியல் கட்சிகளுக்கு அனுமதி கொடுப்பதோ, வெளிநாடுகளிலிருந்து இயங்கும். எதிர்ப் புரட்சி சக்திகளுக்கும், அவர்களின் உள்நாட்டு ஆதரவாளர்களுக்கும் அனுமதி வழுங்குவதோ, ஜனநாயகம் ஆகாது. புரட்சிகர சோசலிசப் பன்மைவாத ஜனநாயகத்திற்கு ஒரு வரம்பு உண்டு வரம்பு மீறிய ஜனநாயகம், புரட்சி சக்திகளுக்கு அழிவை ஏற்படுத்தும்.

4. தொழிற்சாலைகளிலும், பிற உற்பத்தி சாலைகளிலும் வர்க்க அடிப்படையிலான ஜனநாயகம் தேவை. அப்போது தான் உற்பத்தியும் விநியோகமும் உழைக்கும் மக்களின் கட்டுப்பாட்டில் இருப்பதோடு புரட்சிகர அரசாங்கமும் உழைக்கும் மக்களின் கண்காணிப்பில் இருந்து வரும்.

5. உள்நாட்டுச் சந்தையை, இலக்காகக் கொண்ட சிறிய, மற்றும் நடுத்தர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரா. நரேந்திரகுமார்

# மகளே! மகளே!

*மகளே! என் அன்பே!*

நீ எனக்கு மகளல்ல. நானோ உன் தந்தையுமல்ல. எனினும் நீ தான் என் ஆசை மகள். உன்னைப் பெற்றவர்கள் யார்? உனக்கும் தெரியாது. எனக்கும் தெரியாது. மனைவியே இல்லாதுபோன எனக்கு நீ மகளாக வந்தாய். குறுகிட வைக்கும் ஒரு மார்கழி விடியலின் போதுதான் என் தங்கமே! ஒரு புதரின் அருகே புதையலாய்க் கிடந்த உன்னை நான் கண்டெடுத்தேன். குறுகிப் போன மின்னலாயும்; குறுகத் தரித்த குறளாயும்; விரிந்து பரந்த பூங்கொத்தாயும்; விழிகளில் நீர் சொரிந்த வியப்பாயும்...உன் பிஞ்சுப் பாதங்களை ஆட்டி ஆட்டி அழுத வண்ணம் இருந்தாய். உன்னை என் மார்போடு தழுவிக் கொண்டேன். எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. என் தழுவலில் இதங்கண்டு கோழியின் கால்களைப் போன்ற கைகளால் என் கேசத்தை நீ தன்னுணர்வில்லாமல் பிடித்து இழுத்தபடி சிரித்தாய். அந்தச் சிரிப்பு என் முகத்தில் விதையானது. நீண்ட நாட்களுக்குப் பின்னர் நானும் சிரித்தேன்.

நீ எனக்குக் கிடைத்த அந்த வசந்தத்தின் விளிம்பில் உனக்குப் பரிசாகக் கொடுக்க என்னிடம் ஒன்றுமேயில்லை. மனமெலாம் நிறைந்து இருந்த முத்தங்களையும், வயிறெலாம் குடிகொண்ட பசியினையும் தான் உனக்குக் கொடுத்தேன். உன்னைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். பசி சூல் கொண்ட போது, வீறிட்டு அழுதாய். அதன் பின் தான் நான் பிரக்ஞையுற்றேன். போய்க் கொண்டிருந்த வெள்ளாட்டை இழுத்து வந்து, விம்மிப் புடைத்துக் கொண்டிருந்த காம்புகளை விரல் கொண்டு நீவி, அதன் பாலை உனக்காகப் பீய்ச்சித் தெளித்தேன். அது நுப்பும் நுரையுமாய் உன் கடைவாயில் வழிந்தபோது தலைக்காவிரியின் பிரவாகமாய் எனக்குத் தெரிந்தது. என் கைகளை விரித்தேன்; உள்ளங்கைகளை உனக்குப் படுக்கையாக்கினேன். உலகத்தையே கைகளில் எடுத்த உணர்வோடு உன்னைக் கைகளில் தாங்கியபடி காற்றோடு நடைபோட்டேன். என் சட்டையைக் கழற்றி உனக்கு மாட்டினேன்.

உன்னைக் காலமெல்லாம் என் இரண்டு கைகளுக்குள் பத்திரப்படுத்தினேன். உன்னைப் பத்திரப் படுத்தத்தான் செய்தேன். ஆனால் சிறைப்படுத்தவில்லை. கடலுக்குள்ள சுதந்தரமெல்லாம் உனக்கும் தந்தேன். காற்றுக்குள்ள சுதந்தரமெல்லாம் உனக்கும் தந்தேன். மனிதர்களின் தோழமையை நான் கற்றுக் கொடுக்காமலேயே அறிமுகம் செய்து கொண்டாய். நிலாவையும், நட்சத்திரங்களையும் நண்பர்களாக்கி நாம் இரவெலாம் பேசிக் கொண்டேயிருப்போம்.

---

தொழிற்சாலைகளுக்கு முதன்மை கொடுக்கப்படவேண்டுமே அன்றி, பெரிய அளவிலான அதிகாரவர்க்க, மற்றும் தனியார் துறை ஏற்றுமதித் தொழிற் திட்டங்களுக்கு அல்ல.

6. சுதந்திரமான தேர்தல்களை நடத்துவதற்கு முன்பு வெளி நாடுகளிலிருந்து இயங்கும் ஆயுதம் ஏந்திய எதிரிகள், அவர்களின் உள்நாட்டுக் கூட்டாளிகள் ஆகியோர் ஒழித்துக் கட்டப்பட்டு, புரட்சிகர அரசும், ஆட்சியும் வலுப்படுத்தப்படவேண்டும்.

பிப்ரவரி தேர்தலில் ஓர்டெகா, தோல்வியடைந்ததால் அரசு அதிகாரத்திற்கான வர்க்கப் போராட்டம் முடிந்து விட்டது என்று நாம் கொள்ள வேண்டிய அவசியமில்லை. சமுதாயத்தின் முக்கிய சக்திகளாக உள்ள நகர்ப்புற, கிராமப்புற உழைக்கும் மக்கள், வெகுஜன அமைப்புகள், அரசு இயந்திரம், ராணுவம், குடிப்படை, நீதித்துறை, காவல்துறை ஆகியவற்றில் தம் பிடிப்பை இன்னும் தளர்த்தவில்லை. அளப்பரிய தியாகத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இத்தகைய செல்வாக்கையும் வலிமையையும் அந்நாட்டின் புரட்சிவாதிகள் முற்றிலுமாக விட்டுக் கொடுத்து விட மாட்டார்கள் என்பது உறுதி. இதற்காக அவர்கள் பெர்லின் சுவர்களை எழுப்ப வேண்டியதில்லை. ஆனால் வர்க்கப் பகைவர்களுக்கெதிரான தடை சுவர்களைக் கட்டியேதீரவேண்டும் (barricades)

இக்கட்டுரைக்கான ஆதாரங்கள்:


1. Without a wall, Editorial in Economic and political weekly, March 3, 1990.

2. Nicaragua : Victory of 'Donna Violeta by sumit Chakravarthy, Mainstream, March 3, 1990.

3. Electoral Defeat of Sandinistas by James Petras, Economic and Political weekly, March 17, 1990.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனக்குக் கிடைத்தவற்றையெல்லாம் உன்னோடு பகிர்ந்தேன். நீயும் உனக்குக் கிடைத்த வற்றையெல்லாம் என்னோடு பகிர்ந்தாய். உன் கை விரல் நகங்களுக்கும், கால் விரல் நகங்களுக்கும் மருதாணி பூசினேன். மறுநாள் காலையில் உன்னுடைய செம்மாந்த விரல்களைக் கொண்டு என் கன்னங்களை நீவிய போது மயிர்க் கால்களெல்லாம் நிலைகுத்திப் போனேன்.

என் செல்வமே! உன்னைப் புதைத்த இந்த இடத்தை அழகு செய்கிறேன். நீ உள்ளே தூங்குகிறாயா, என் கண்ணே!

என்னை விட்டுத் திடுமென பிரிந்துபோன நீ ஏழெட்டு வருடங்களுக்குப் பின்னர் துப்பாக்கியும் கையுமாக வந்தாய். புரட்சி இயக்கத்து வீராங்கனையாய் வந்தாய். உன் கையில் குழந்தையைத் தூக்க வேண்டிய வயதில் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டாய். தண்ணீர்த் தொட்டியில் விழுந்து இறந்து போன காக்கையைத் தூக்கிப் போடுவதற்குக் கூட அஞ்சிய நீதான் துப்பாக்கியைத் தூக்கினாய். உன்னைப் பார்த்த அந்த நாட்களில் நான் கவலை தோய்ந்தவனாகத்தான் இருந்தேன். ஆனாலும் அழவேயில்லை. ஒரு நாள் தற்செயலாக நீ ஒளித்து வைத்திருந்த புத்தகங்களைப் பார்த்தபோது தான் உன் பெண்மையில் சுடர்விட்ட மிடுக்கு, புரட்சி வாதியின் மிடுக்கு என்பதைப் புரிந்து கொண்டேன்.

நான் எதிர்பார்த்தபடியே ஒருநாள் நீ வந்தாய். உன் தோழர்கள் சிலரும் உன்னோடு வந்தார்கள். அன்றும் உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றுமேயில்லை. சுள்ளிகளை எடுத்துச் சுட்ட மாமிசத் துண்டுகளை உன் தோழர்கள் எனக்குக் கொடுத்தார்கள். அதில் ஒட்டியிருந்த கரியை நீக்கி, சாம்பலையெல்லாம் ஊதி அவற்றைத் தின்ற நீதான் எனக்குக் கற்றுக் கொடுத்தாய். வெந்து போன மாமிசத்தை மென்று தின்ற போது புடைத்து நின்ற என் மோவாய்த் தசையை பாசத்தோடு நீ வருடிக்கொடுத்தாய். அன்று இரவு நீ தூங்கிய பின்னும் உன் முகத்தை நான் என் கைகளில் ஏந்திக் கொண்டேயிருந்தேன். எந்தத் தடையுமே சொல்லாமல் மறுநாள் உனக்கு விடை கொடுத்தேன். நீ ஒரு போராளியின் கம்பீரத்துடன் என்னைப் பிரிந்தாய்.

குடை மரத்தினடியில் ஒரு நாள் உட்கார்ந்து கொண்டிருந்தேன். சின்ன மூங்கில் துண்டில் ஒரு புல்லாங்குழல் செய்து கொண்டிருந்தேன். ரத்த விளாராய், ரத்தத்தில் தோய்ந்து துவண்டுபோன சேறும் சகதியுமாய் உன் தோழர்கள் உன்னைக் கொண்டு வந்து என் முன்னே கிடத்தினார்கள். நான் அழுது உன்னை அவமானப்படுத்தவில்லை. உன்னை முதன்முதல் கண்டெடுத்த போது உனக்கு ஆட்டுப்பால் கொடுத்த நேரத்தில் அது நுப்பும் நுரையுமாக உன் கடைவாயில் வழிந்து பெருக்கெடுத்ததே... அதே இடத்தில் இரத்தப் பசை தடித்த வரியாய் காய்ந்து போயிருந்தது. உன் கண்ணின் இமைகள் தைக்கப்பட்டிருந்தன. களத்தில் இறந்துபோய்க் கிடந்த உன் கண்களை உன் தோழர்கள் எடுத்துக் கொண்டார்களாம் நீ இறந்த பின்பும் யார் மூலமோ பார்த்துக் கொண்டிருக்கிறாய் என்பதில் எனக்கு ஒரு ஆறுதல். உன் தோழர்கள் உனது ராணுவ உடுப்பைக் களைய எத்தனித்த போது நான் தடுத்தேன். அந்த உடையில் நீ எடுப்பாக இருந்தாய்.

இது வரை வராத உன் தாயின் நினைவு எனக்கு இன்றுதான் வந்தது. உன்னைப் பெற்ற அந்த மாதரசி யாரோ?

நான் உனக்கு தாயுமானேன். தந்தையுமானேன். நீ எனக்கு தாயுமானாய். மகளுமானாய்.

இந்தப் பூமிக்கடியில் உன்னைக் கிடத்தி உனது தோழர்கள் புறப்பட்டுப் போனார்கள். உன் உடலைத் துளைத்த துப்பாக்கியின் தோட்டாக்களை அவர்கள் எடுத்து வைத்திருக்கிறார்களாம்.

நீ பார்த்த ஆறு இன்னமும் ஓடிக்கொண்டு தானிருக்கிறது. நீ மட்டும் தான் இல்லை. நீ பார்த்த பூ மரம் இன்னமும் நிழல் தந்து கொண்டுதானிருக்கிறது. நீ மட்டும் தான் இல்லை. என் அன்பே! நான் கூட இருக்கிறேன். நீ மட்டும் தான் இல்லை.

என் மகளே! பழுத்துப் போன பாகற் பழம் போன்ற என் இமைகள் பழுத்துத் தொங்கி எனது பார்வையை மறைக்கிறதம்மா...

ஊர் மக்களைப் புதைக்கும் இடுகாட்டில் உன்னைப் புதைக்காமல் இந்தக் காட்டு மரத்தின் அடியில் என் கண்மணியைப் புதைத்திருக்கிறேன். இத்தனை காலத்திற்குள் உனது பொன்னுடல் மக்கி, தூர்த்து, சிதைவுற்று, இந்தப் பூமியில் கலந்திருக்கும். உன் தோழர்களில் பலரும் இதே நிலையை அடைந்திருப்பார்கள். ஆனால், பார்வையற்றோர் பலர் முகங்களில் பதிக்கப்பட்டுள்ள சுடரும் சோபனமுமான உங்கள் கண்கள், உங்களால் நீர் வார்க்கப்பட்ட வேர்கள் விருட்சமாய் வளர்ந்து விண்ணெட்டும் நிலையைப் பார்த்து பார்த்துப் படபடக்கும். காலத்தால் உண்மையாகிப் போன உங்கள் கம்பீரமான கனவுகள் உங்களுக்கு வணக்கம் செய்யும். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சவப் பெட்டியில் நான்

# கவிஞர் ஆப்ரஹாம் ஸுட்ஸ்கேவெர்

**கட்டிடமொன்றின் தகரக் கூரையின் கீழ், குப்புறப்படுத்துக் கொள்ள மட்டுமே வசதியிருந்த குறுகலான இடத்தில் ஏழு மாத காலம் ஒளிந்திருந்த அவர் நிலா வெளிச்சத்தைக் கொண்டு 'சேற்றில் புதைந்த முகங்கள்' என்ற கவிதையை எழுதினார். நாஜிகளிடமிருநது தப்பிப்பதற்காக ஒருமுறை அவர் ஒரு சவபெட்டிக்குள் புகுந்து கொண்டார்.**

★ மொழியாக்கமும் முன்னுரையும் எஸ். வி. ராஜதுரை, வ. கீதா ★

இருபதாம் நூற்றாண்டில் எத்தனையோ மனிதப் படுகொலைகள். இரத்தம் கசிந்து கொண்டிருக்கும் பக்கங்கள் அதன் வரலாற்றை நிரப்பிக் கொண்டிருக்கின்றன. இரண்டு உலகப் போர்கள், நாகசாகி-ஹிரோஷிமா, பாசிசத்தின் பெயராலும் சோசலிசத்தின் பெயராலும் நடந்த அழித்தொழிப்புகள், இலங்கை பஞ்சாப் என்று முடிவில்லாத துயரப் பாதையில் உலகம் பயணம் செய்து கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது. மனிதனைக் கொன்றுவிட்ட நூற்றாண்டு என ஆந்த்ரே மால்ரோ கூறிய இந்த யுகத்தில் மனிதத் தன்மையற்ற நிலையிலிருந்து மனிதனால் தனது மானுடப் படிமத்தை மீட்டெடுக்க முடியுமா என்ற கேள்வி நம் காலத்தில் பல முறை எழுந்திருக்கிறது.

கிழக்கு ஐரோப்பிய நகரங்களிலே பல லட்சம் யூதர்கள் நச்சுப் புகைக்கூண்டுகளில் தூக்கி யெறியப்பட்டபோது அவர்களின் சாம்பலிலே மிதந் வந்தது இக்கேள்வி.

மனிதப் படுகொலைகளின் இனக்கொலைகளின் வரலாற்றில் மிகமிகக் கொடூரமான அத்தியாயம் இது. நாஜிகள் கொலைகளை மட்டுமா செய்தனர்? நகரங்களில் ஒதுக்குப் புறங்களில் (Ghettos) அடைத்து வைக்கப் பட்டிருந்த யூதர்களானாலும் சரி, சித்திரவதை முகாம்களிலே மரணத்தின் தழுவலுக்காகக் காத்திருந்தவர்களானாலும் சரி, அவர்களை மானுட ஜீவிகளாக ஆக்குகிற ஒவ்வொரு அம்சத்தையும் நாஜிகள் திட்டமிட்டுச் சிதைத்தனர். மனிதப் பிணைப்புகளை அறுத்தெறிந்தனர்; கடந்தகால வாழ்வு பற்றிய அவர்களது நினைவுகளை அகற்றினர்; 'தான்' என்ற உணர்வே அவர்களிடம் எழக்கூடாது. எனச் செயல்பட்டனர்; சூழ்நிலைகளைப் புரிந்துகொள்ளும் ஆற்றலையும் பறித்தெடுத்தனர். யூதர்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் பேரழிவுகளைப் பற்றிப் பேசுவதற்குரிய ஒரு மொழியே இல்லை என்று கூறக்கூடிய அளவிற்கு நாஜிகள் கோரத்தாண்டவமாடியிருந்தனர்.

இந்த யூதர்களுக்கோ சாவைக்காட்டிலும் அச்சந்தரக்கூடிய மற்றொரு விடயம் காத்திருந்தது. தங்களுக்கு நேரிட்டக் கொடுமைகளை, வேதனைக் குரலை உலகத்தின் செவிகளுக்கு எட்டச் செய்வதற்கான வாய்ப்புக்கூட இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சந்தான் அது. ஆனால் சாவைத் தழுவியே தீர வேண்டியிருந்த அந்த அபாக்கியவாதிகளால் இந்த அச்சத்தை வெல்ல முடிந்திருக்கிறது. மனித குலத்தின் மனச்சாட்சியை என்றென்றும் உறுத்துகிற கலை இலக்கிய சாட்சிகளை நூற்றுக்கணக்கில் அவர்கள் விட்டுச் சென்றிருக்கிறார்கள். ஒரு போதும் வெல்லப்பட முடியாத மனித ஆன்மாவின் வெற்றிச் சித்திரங்கள் அவை.

அவற்றிலிருந்து எடுக்கப்பட்ட ஏழு கவிதைகள் இங்குத் தரப்படுகின்றன.

லிதுவேனிய சோவியத் குடியரசின் தலைநகரம் வில்னியஸ் (முன்பு : வில்னா) நாஜிகள். இந்த நாட்டை ஆக்கிரமித்தபோது, 1941 ஜுன் 24ல் இருந்து டிசம்பர் 22க்குள் 33,000 யூதர்கள் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டனர். 1944 ஜுலையில் சோவியத் செஞ்சேனையும் யூதர்களின் விடுதலைப் படையும் (Partisans) சேர்ந்து வில்னாவை விடுவித்த சமயத்தில் அங்கு முன்பிருந்த 65,000 யூதர்களில் ஓராயிரம் பேரே எஞ்சியிருந்தனர்.

இந்தக் கொடூரமான சூழலிலும்கூட, அழியா இலக்கியத்தைப் படைப்பதில் வெற்றி கண்டவர் அன்று இருபத்தெட்டு வயது நிரம்பியிருந்த கவிஞர் ஆப்ரஹாம் ஸுட்ஸ்கேவெர் (Abraham Sutzkever). கட்டிடமொன்றின் தகரக் கூரையின் கீழ், குப்புறப் படுத்துக் கொள்ள மட்டுமே வசதியிருந்த குறுகலான இடத்தில் ஏழு மாத காலம் ஒளிந்திருந்த அவர் நிலா வெளிச்சத்தைக் கொண்டு 'சேற்றில் புதைந்த முகங்கள்' என்ற கவிதையை எழுதினார். நாஜிகளிடமிருந்து தப்பிப்பதற்காக ஒரு முறை அவர் ஒரு சவப்பெட்டிக்குள் புகுந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டார். ஒரு பிணத்தின் மீது படுத்துக் கொண்டே 'சவப் பெட்டியில் நான்' என்ற கவிதையை எழுதினார். மரணதேவதையிடம் ஒப்படைக்கப்பட்ட அபாக்கியவாதிகளிடமிருந்து நாஜிகள் பறித்தெடுத்த உடைமைகளில் தனது தாயின் காலணிகளும் இருப்பதைக் காண நேரிட்டபோதும் தனது பால் மணம் மாறாப் பாலகன் மருத்துவமனையில் நாஜிகளால் நஞ்சூட்டப்பட்டு கொல்லப்பட்டபோதும் அவர் கவிதைகள் எழுதினார்.

லிதுவேனிய வனப்பகுதியொன்றில் யூதர்களின் விடுதலைப் படையில் சேர்ந்துகொண்ட கவிஞரையும் அவரது மனைவியையும் சோஷயத் படையினர் 1944 மார்ச் 12இல் விமானம் மூலம் மாஸ்கோவுக்கு அழைத்துச் சென்றனர். 1947 முதல் இஸ்ரேலில் வாழ்ந்து வரும் அவர், அங்குள்ள பிரபல இலக்கியப் பத்திரிகையொன்றில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

புகழ்பெற்ற அமெரிக்கக் கவிஞர் சி. கே. வில்லியம்ஸால் யிட்டிஷ் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு American Journal of Poetry (Now-Dec 1988) என்ற சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட பதினொரு கவிதைகளில் ஆறு கவிதைகளும் மர்ரே வுல்ஃப் என்பவரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு Partisan Review (Spring 1989) என்ற மற்றொரு அமெரிக்க சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள 'முத்தம்' என்ற கவிதையும் இங்கு தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.

## முத்தம்

அந்த அதிசயம் நிகழ்ந்தது மிக இயல்பாகவே
முத்துக்களைத் தேடி கடலில் மூழ்கிய
ஒரு கவிஞன்—
சிலிர்த்தான், வேட்கை கொண்டான்
அசையாது
முதல் முத்தின்மேல் அவன் பதித்த மிக
மென்மையான முத்தத்துடன்
மறைந்தன அவனது கால்கள்
மறைந்தது அவனது முகமும்
கண்ணீர் இல்லை—
அவனது கவிதைகளுக்குள்ளே அக்கவிஞன்.

●

## இதயத்தின் ஆழத்திலிருந்து

இதயத்திலிருந்து ஒரு குரல்!
உரிமை—
இழிவு படுத்தப்பட்ட சொல்—
அதில் நம்பிக்கை கொள்
சிங்கத்தின் தூரத்து வாரிசுதான் நீ
அடிமைத்தனத்தை
உதறி எறி
போராடு

ஒரு மார்க்கம் உண்டு
அது நினைவுக் காடுகளிலிருந்து
எழுகிறது
இன்னமும் தொற்றக்கூடிய
புராதன நோயும் உண்டு
உனது கொடும் வேதனையை
உணர்ந்தறிய
உனது நரகங்களை இனம் கண்டுகொள்
நமது மூதாதையர்
புராதனத் தளைகளை உதிர்த்தெறிகின்றனர்
நமது பிள்ளைகள்
எச்சரிக்கை மணியோசை கேட்டு
விழித்தெழுகின்றனர்.

தவறுகள் வழியாக ஒரு பாதை
வரலாறு புறக்கணித்ததை
மீட்டெடு
பீதியை மரணம் மன்னிக்கும்
பணிதலை அல்ல ஒரு போதும்.

●

## சாம்பல் படிவுகள்

உன் கடிதங்களைக் கொண்டு நான்
தேநீர் கொதிக்க வைத்துக்
கொண்டிருக்கிறேன்
இதயத்தைத் தொடும் அவற்றில்
எஞ்சியிருப்பனவெல்லாம்
மெல்லிய ஜ்வாலை நெளியும்
சாம்பல் படிவுகள்
என்னால் படிக்க முடிகின்ற
இந்தக் கணத்தில்தான் நான் கேட்கிறேன்:
உனது கடிதங்களெனும் என்
ஒரே பொக்கிஷத்தைக் கொண்டு
உண்மையிலேயே நான்
தேநீரா கொதிக்க வைத்துக்
கொண்டிருக்கிறேன்?

காற்றே, நீ அசையாது நிற்பதில்
கல்லறை தோற்கட்டும்!
நிழலே, நில் அங்கேயே
ஒரே ஒரு மூச்சு
என் பொக்கிஷத்தின்
இதம் தரும் அழகுகளை
பொறாமை கொண்ட உலகம் மீது
சிதறடித்துவிடும்

இந்த சாம்பல் படிவுகளில் நீ எனக்கு
எவ்வளவு பிரியமானவளாய்த் தோன்றுகிறாய்
இந்த சாம்பல் படிவுகளில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எவ்வளவு பிரகாசமாய் மங்கி மறைகிறாய்
என்னால் படிக்க முடிகின்ற
இந்தக் கணத்தில்தான் நான் கேட்கிறேன்:
உன் கடிதங்களெனும் என்
ஒரே பொக்கிஷத்தைக் கொண்டு
உண்மையிலேயே நான்
தேநீரா கொதிக்கவைத்துக்
கொண்டிருக்கிறேன்?

●

## சவப்பெட்டியில் நான்

இந்தச் சவப்பெட்டியில் நான்
மரவுடையில் இருப்பது போல்
ஒரு படகு
வஞ்சகக் கடலலையில்
அலைக்கழிக்கப்படும்
ஒரு தொட்டில்
ஒரு கப்பல்
அழிகின்ற உடல்களையெல்லாம்
அழியாமைக்கு இட்டுச் செல்லும்
இங்கிருந்து
என் சகோதரியே
உன்னை நான் அழைக்கின்றேன்
நீயிருக்கும் தொலைவில்கூட
என் குரல் உன் காதில் விழும்
என் சவப்பெட்டிக்குள்
ஒரு சலனம்
ஒரு வருகை—இங்கே நீ
உனது நட்சத்திரக் கண்கள்
ஒரு ஒளி, உனது மூச்சு
உனது கண்ணீர்
உன்னை அடையாளம் காட்டும்.

இதுதான் நியதி
இதுதான் கதை
இங்கு இன்று, நாளை இல்லை
ஆனாலும் இப்போது
என் சவப்பெட்டியில்
மர உடையில்
உயிர்த்தெழுகிறது என் பேச்சு
இசைபாடுகிறது என் மொழி.

●

## எனது குழந்தைக்கு

பசியினாலோ
ஆழ்ந்த பாசத்தினாலோ
—அதற்கு அம்மா சாட்சி—
நான் உன்னை விழுங்க விரும்பினேன்
கண்ணே
உன் சின்னஞ்சிறு உடலை
நான் ஸ்பரிசித்தபோது
சூடான தேநீருள்ள
கண்ணாடிக் கோப்பை போல்
குளிர்ந்தன என் கரங்கள்.

எனக்கு நீ அந்நியனோ அதிதியோ அல்ல
நமது பூமியில், நாம்
நம்மைத்தான் பெற்றெடுக்கிறோம்
நம்மை வளையங்களில் இணைத்து
தொடர்சங்கிலியில் பிணைக்கிறோம்

கண்ணே
உனக்குரிய சொல் பாசம்
ஆனால் சொற்களின்றியும் நீ பாசம்தான்
கனவின் வித்து
அழைக்காது வந்த மூன்றாவது ஜீவன்
உலகின் எல்லைகளிலிருந்து
எங்களிருவரையும்
இன்பத்தின் உச்சத்திற்கு
ஈர்த்துச் சென்றவன்
எப்படி உன்னால்
உன் கண்களை மூடிக்கொள்ள முடியும்
நீ உதறியெறிந்த
இந்த இருண்ட பனி உலகத்தில்
என்னை விட்டுவிட்டு?

நட்சத்திரங்களின்
நடனத்தைக் காண்பதற்காக
உனக்கென்று ஒரு தொட்டில்
இருந்ததில்லை
உன் மீது கதிர்களைச் சாய்க்காத கதிரவன்
கண்ணாடிபோல் சிதறட்டும்
பாலென நம்பிப்
பருகிய நஞ்சில்
கரைந்தது உன் நம்பிக்கை.

உன்னை விழுங்க விரும்பினேன் கண்ணே
எனக்காகக் காத்திருக்கும்
எதிர்காலத்தை ருசிப்பதற்காக.
எனது ரத்த நாளங்களில்
மீண்டும் நீ மலர்வாயோ.

அதற்கும் இல்லை எனக்குத் தகுதி
உனக்குக் கல்லறை நானல்ல
உனக்கான இந்த முதல் ஓய்வை
அழைப்பு விடுக்கும் பனியிடம்
விட்டுச் செல்கிறேன்
இப்போது நீ
அந்திப் பொழுதின் இழைபோல
அமைதியின் ஆழத்தில்
அமிழ்வாய்
குளிர்ந்த மண்ணுக்கடியில்
மெல்லிய துளிர்களுக்கு
என் வாழ்த்துக்களை
ஏந்திச் செல்வாய்.

(அடுத்த இதழில் மீதி) □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# காதல்தான் உலக உயிர்கள் அனைத்துக்கும் அடிப்படையாக இருக்கிறது

☐

**பேராசிரியர் ஓம்ரான் டாலிப்**

? அடக்குமுறைக்கும், காலனியாதிக்கத்திற்கும் ஒரே தீர்வு சோசலிசத் தத்துவமே என்பது உங்கள் எண்ணம்...

! சந்தேகமில்லை. சோசலிசத்தை நான் ஆதரிக்கிறேன். அது அவசியமானதும்கூட. ஆனால் கம்யூனிசத்திற்கும், சோசலிசத்திற்கும் இடையே சிறிய இடைவெளிதான் வேறுபாடு. உதாரணமாக, ஒரு நாடு சோசலிச நாடாக மாறுமேயானால் அது கம்யூனிச நாடாக மாறுவதற்கு 20 ஆண்டுகள் ஆகலாம். இன்று உலகம் முழுவதும் இந்தியா போன்ற மக்கள் தொகை அதிகமுள்ள நாடுகளுக்கு உணவு, சுகாதாரம், சமத்துவம், நீதி போன்றவை கிடைக்காமல் உள்ளது. ஆகவே சோசலிசத்தில் மட்டுமே இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என்று நம்புகிறேன்.

? சிரியாவிலிருந்து — பாகிஸ்தான், இந்தியா போன்று உலகம் முழுவதும் பயணம் செய்துள்ளீர்கள் 5 ஆண்டு இந்தியாவில் தங்கியிருந்தீர்கள். நீங்கள் சுற்றிப்பார்த்த சமூகங்களில் எந்தச் சமூகம் நல்லபடியாக இருக்கிறது என்று நினைக்கிறீர்கள்?

! எந்தச் சமூகமும் அதன் உண்மை உணர்வில் சந்தோஷமாக இல்லை. அது ஒரு கனவு. அமெரிக்காவை எடுத்துக்கொண்டால்கூட அங்கு செழுமையும் சந்தோஷமும் நிரம்பி வழிகிறது என்று பெரிது படுத்திப் பேசபபடுகிறது. ஆனால், உண்மையில் அப்படி இல்லை. அங்கு மக்கள் துன்பப்படுவதை காணலாம். ரஷயாவில் உணவு, சுகாதாரம் போன்றவை எல்லோருக்கும் கிடைத்தால் கூட அவர்களுக்குள் சில வெறுப்பும் தாழ்வுகளும் இருக்கத்தான் செய்கிறது.

? உணவு ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படையான ஒன்று. சிலநாடுகளில் மக்களும் அவர்தம் அரசாங்கமும் இத்தேவையை நிறைவு செய்துள்ளனர். இத்தேவை நிறைவானதும் பாலியல் தேவை (Sexual need) ஆரம்பமாகி குற்றங்கள் பெருக ஆரம்பிக்கின்றன. எனவே, நீங்கள் சொன்னதுபோல எந்தவொரு சமூகமும் நிறைவு பெறுவதில்லை.

! ஒரு இலக்கைச் சுற்றியே நாம் அனைவரும் சுற்றி வருகிறோம். ஒரு பிரச்சினை தீர்ந்ததும் அடுத்த பிரச்சினை ஆரம்பமாகிறது. இப்படியே நமது வாழ்க்கை சுழன்று வருகிறது.

? இலக்கியமும் அரசியலும் வேறானவை அல்ல. இரண்டும் ஒன்றுக்கொன்று நெருக்கமானது என நினைக்கிறேன்.

! உண்மை தான். பொருளாதாரமும் நெருக்கமானதுதான்.

? இலக்கியம் பற்றி, சில கேள்விகள் கேட்க ஆசைப்படுகிறேன். கார்க்கியின் படைப்புப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

! கார்க்கி ஒரு மாபெரும் எழுத்தாளரும் போராளியும் ஆவார். அவரது படைப்புகள் இதற்கு சான்றுகளாக இருக்கிறது. பணக்காரர்களுக்காகத் தங்களை கஷ்டப்படுத்திக்கொண்டும், அர்ப்பணித்துக் கொண்டும் வாழும் ஏழை மக்களுக்காக எழுதும் எழுத்தாளர்களுக்கு ஒரு முன் உதாரணமாக இருந்தவர். உண்மையில் மிகப்பெரிய எழுத்தாளர்.

? கார்க்கிக்குப் பிறகு ரஷ்யாவில் சிறந்த எழுத்தாளராக நீங்கள் யாரைக் கருதுகிறீர்கள்.

! அலெக்சய் டால்ஸ்டாய் கூட பெரும் எழுத்தாளராக இருந்தார். சிலபோது அறிவியல் புனைகதைகளையும் எழுதி வந்தார். அவரது அறிவியல் புனைகதைகளில் மனிதாபிமானம் மிகுந்திருப்பதை நீங்கள் பார்க்கலாம்.

? ஜீன்பால் சார்த்தரைப்பற்றி...

! ஆண்ட்ரு மார்லாக்சுடன் (Andrew Marlaux) பொருத்திப் பார்க்கும்போது சார்த்தர் மாபெரும் எழுத்தாளர் என்று சொல்லமுடியாது. மார்லாக்ஸ் பலதரப்

சென்ற இதழ் தொடர்ச்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்ட மக்களுக்கான எழுத்தாளர். மக்களின் துன்பங்கள் பற்றி எழுதினார். பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளையும், அவர்களின் நம்பிக்கையின் உருவத்தையும் அவர் நூல்களில் நீங்கள் பார்க்கலாம். சார்த்தர் ஒரு பிரெஞ்சு எழுத்தாளர், அவ்வளவே. ஆனால், அவரின் ஆரம்பகால எழுத்து மாபெரும் எழுத்தாளராக வளருவார் என்ற நம்பிக்கையைத் தந்தது. பிறகு அவரது படைப்புக்கள் மேற்கத்திய நாடுகளுக்கு பயன்படக் கூடிய நிலைக்குப் போய்விட்டது. மூன்றாம உலக நாடுகளில் உள்ள மக்களின் துன்பங்களைப் பற்றியோ, பிரச்சினைகளைப் பற்றியோ அவர் பேசவில்லை.

? இப்படியும் சிலநேரம் நடப்பதுண்டு. உதாரணமாக உங்கள் நாடு மிகக் குழப்பமான சூழ்நிலையில் இருக்கும்போது நீங்களும் அதே நிலையைத்தான் (மௌனமாயிருப்பது) எடுப்பீர்கள். சிக்கல்கள் முடிந்தபிறகோ சிறிய பிரச்சினையாக இருக்கும்போதோ நீங்கள் காதல் கதைகளையும், கற்பனைக் கதைகளையும் எழுதுவீர்கள். இந்தச் சூழ்நிலையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

! என்னைப் பொறுத்தவரையில் மனித வாழ்க்கைக்கும் மூன்றாம் உலக மக்களின் பிரச்சினைகளுக்கும் சார்த்தரின் படைப்புக்கள் உதவியாக இருக்கும் என்று அவரை ஆராய்வதோ, அல்லது அவர் படைப்புகளையோ படிக்க மாட்டேன். மாறாக நான் கார்க்கியைப் படிப்பேன். காரணம் மனிதனின் உணர்வுகளையும், கஷ்டங்களைப் பற்றியும் அவர் எழுதியிருக்கிறார். சார்த்தரின் படைப்புகள் நம்மைவிட்டும், நமது கற்பனைகளை விட்டும் வெகுதூரத்தில் இருக்கிறது. இது என் கருத்து. நல்லது. நீங்கள் மட்டும் ஏன் அறிவியல் புனைகதைகள் எழுதுகிறீர்கள் என்று கேட்கலாம். காரணம், சில ஆதிக்கத்திலிருந்து எப்படி தப்பிப்பது என்பதற்காகவே எழுதுகிறேன்.

? காதலைப் பற்றியும் விளக்க விரும்புகிறீர்கள் என்றால் மனிதனின் பிரச்சினைக்கு காதல் ஒருவழிபாடாக எடுத்துக் கொள்வீர்களா.

! உண்மைதான். காதல்தான் உலக உயிர்கள் அனைத்துக்கும் அடிப்படையாக இருக்கிறது. காரணம் மனித இனமே ஒருவர் மற்றொருவரிடம் அன்புகொண்டிருப்பது. மனிதனுக்கு ஏற்படும் பிரச்சினைகளின் ஒரு பக்கத்தை மட்டுமே சில எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள். சார்த்தர் (Sartre) படைப்புகளில் இப்படித்தான் உள்ளது. மனிதனின் ஒரு பக்கத்தை மட்டுமே காட்டும் இவ்விலக்கியங்களை நான் ஏன் ஆதரிக்க வேண்டும்?

? 1946க்குப் பிறகு உங்களில் சில எழுத்தாளர்கள் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டனர். அரபு இலக்கிய உலகில் சிறந்த எழுத்தாளர் என்று யாரை நினைக்கிறீர்கள்?

! அரபுலகில் இருவகை எழுத்தாளர்கள் இருக்கின்றனர். ஒருவகை சார்த்தரைப் போலவும், மற்றொரு வகை மக்களுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டு அவர்களின் உணர்வுகளையும், எண்ணங்களையும் படைப்பது. மக்களுக்காக எழுதும் இவர்களை நான் மதிக்கிறேன். அரபு மக்களால் மிகவும் விரும்பப்படும் எழுத்தாளரான ஹன்னாமினியை (Hannamini) சார்த்தருடன் ஒப்பிட முடியாது. தற்பொழுது அரபுலகில் சிறந்த நாவலாசிரியரான இவரை நசிப் மஹபூஷ் (Nazib Mabfooz) உடனும் ஒப்பிட்டுப் பார்க்கமுடியாது. காரணம் மஹ்பூஷ் பல சிறந்த நாவல்களை ஆரம்பத்தில் எழுதினார். ஆனால் பிறகு இவர் மக்களிடமிருந்து அன்னியப்பட்ட தன்மையை இவரது பிந்தைய படைப்புகளில் பார்க்கலாம். பிறகு அராபியர்களுக்கு எதிராக இஸ்ரேலில் உள்ள அல்-குட்ஸ் என்ற அமைதி ஸ்தாபனத்திற்கு சென்ற சதத்துடன் (Sadat) இணைந்துகொண்டார்.

? இதுபோன்ற எழுத்தாளர்கள் தொடர்ந்து உங்கள் நாட்டில் வாழ்கிறார்கள். குறிப்பிட்ட தத்துவத்தை கொண்டிருக்கும் எங்கள் நாட்டில் அவர்களால் எப்படி இருக்க முடிகிறது.

! உண்மைதான். ஆனால் மற்ற அரபு நாடுகளைவிட வித்தியாசமானது எங்கள் நாடு. அரசுக்கு எதிராக அதிக அளவில் இலக்கியங்களும், தினசரிகளும் வெளிவருவதைப் பார்க்கலாம். ஆனால் மேற்கத்திய நாடுகளில் காணப்படும் அளவு நாங்கள் சுதந்திரம் பெறவில்லை. அரபு நாடுகள் எல்லாவற்றையும் பார்க்கும் பொழுது ஓரளவு நாங்கள் பரவாயில்லை. இந்தியாவில் புத்தகம் வாசகனுக்கு கிடைக்க வழி இருக்கிறது. ஆனால் முன்பு சிரியாவில் அப்படி இல்லை. தற்பொழுது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எழுத்தாளர்களுக்கும் வாசகனுக்கு மிடையே நல்ல தொடர்பு உள்ளது.

? கருத்துக்களை வெளியிட சிறந்த வடிவம் கவிதையா, கட்டுரையா.

! கட்டுரை வடிவமே. முன்பு நான் ஒரு கவிஞனாயிருந்தேன்.

? நீங்கள் ஏதேனும் வெளியீட்டிருக்கிறீர்களா.

! முன்பு சில கவிதைகளை வெளியிட்டேன். பிறகு எல்லாவற்றையும் சேர்த்து எரித்து விட்டேன்.

? காஃகாவை நினைவு படுத்துகிறது.

! கவிதையைவிட கட்டுரையே நம் எண்ணங்களை வெளியிட சிறந்தது என்று நினைக்கிறேன். காரணம், கவிதையைவிட கட்டுரையில் உணர்வழுத்தம் அதிகம் கிடைக்கும்போது அதை ஏன் எழுதக் கூடாது?

? கவிதை ஆழமான உணர்வு. ஆனால் உங்கள் கருத்துக்கள் மிகவும் உணர்ச்சிகரமானது என நினைக்கிறேன்.

! சரியானதுதான். கவிதை மக்களிடமிருந்து சிறிது அந்நியப்பட்டது. கவிதைப் புத்தகம் 2000 பிரதிகள் விற்பனையானால் கட்டுரைப் புத்தகம் 20,000 பிரதிகள் விற்கின்றன. காரணம், மக்கள் உடனடி நடவடிக்கையையே விரும்புகிறார்கள்.

? ஆனால், சிலநேரம் இது வித்தியாசப்படுகிறது. 1948க்குப் பிறகு பாலஸ்தீனத்தில் போர் நடந்து கொண்டிருக்கும் பொழுது மக்கள் உட்கார்ந்து கட்டுரை எழுதிக் கொண்டிருக்கவில்லை. ஆனால், பாடல்கள் பாட ஆரம்பித்தார்களே.

! நீங்கள் சொல்வதும் சரியானதுதான்.

? ஆகவே அந்தந்த நாட்டின் சூழ்நிலைக் கேற்றவாறுதான் எது சிறந்த வடிவம் என்று தீர்மானிக்க முடியும் என்று சொல்கிறீர்கள்.

! ஆமாம். ஆனால் அரபு இலக்கிய உலகில் நவகவிதை என்பது யதார்த்தத்திலிருந்து விலகியிருக்கிறது. என்னுடைய கவிதை வரையிலும் கூட.

? இங்கு ஒன்றை நான் சொல்ல வேண்டும். நான் ஒரு இந்தியன் என்ற முறையில் எனக்கு மஹ்முது டார்விஷ், நாசர் அஃப்கானி, அல்-பயாதி, கலில் கிப்ரான் போன்ற கவிஞர்கள்தான் எனக்குத் தெரிகிறது. கட்டுரையாளர்களை எனக்குத் தெரியாது. ஏன் அரபு மக்களுக்கு கட்டுரையைவிட கவிதையே மிக நெருக்கமாக உள்ளதா?

! இது உங்கள் கருத்து.

? என் கருத்தல்ல. அப்படியானால் கட்டுரையாளர்களைவிட கவிஞர்களே அதிகம் தெரிந்திருக்கக் காரணம்...

! நீங்கள் சொன்ன கவிஞர்கள் எல்லாம் பெருங்கவிஞர்களே, ஆனால் டார்விஷ்-ன் கவிதைகளை அவ்வளவு எளிதாக நீங்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க முடியாது. நீங்கள் அதற்குப் பதிலாக ஹன்னா மினியின் கதைகளை மொழி பெயர்த்துவிட முடியும். ஒரு தனி மனிதன் அவர் கவிதைகளை மொழி—பெயர்த்துவிடமுடியாது. சமீப காலமாக ஆங்கில இலக்கிய ஆசிரியர்கூட அரபு நாவலாசிரியர்களையும், சிறுகதை எழுத்தாளர்களையும் கூட நன்கு அறிந்திருக்கிறார்கள். ஆங்கிலத்திலேயேகூட இவர்களின் படைப்புகள் வெளிவந்துள்ளன. டார்விஷ் அரபுலகில் பேரளவில் அறியப்படுவதற்குக் காரணம் அவர் உண்மையில் அராபியர்களுக்காகவும், பாலஸ்தீனத்திற்காகவும் போராடிய பேராளியாவார். சிறையில் இருந்தபோது கவிதை எழுதினார். நீங்கள் பயாசி (Biazi)-யைப்பற்றி பெர்சிய மொழியில் படித்திருப்பீர்கள்.

? ஆங்கிலத்தில் அவரைப்பற்றி படித்திருக்கிறேன்.

! அரபுலகில் அவர் ஒரு பெரிய கவிஞரல்ல. ஆனால் ஒரு சிறந்த கவிஞர் என்று சொல்வேன். மற்றொரு சிறந்த கஜல் (Ghazal) கவிஞர் நாசர் கப்பானி (Nazarqabbani) அரபுலக இளம் வயது ஆண்-பெண்கள் இவர் பாடல்களை மிகவும் விரும்பி கேட்பதால் தற்பொழுது இவர் பிரபலமாகி வருகிறார். ஆனால் அவரது பெரும்பாலான ஷயர்கள் (Shairs) பெண்களைப் பற்றியதாகும். இவர் 20 புத்தகங்கள் எழுதியிருக்கிறார். அதில் கஷ்டப்பட்டு தேடினால் இரண்டு புத்தகம் மட்டுமே போராட்டம் பற்றியும் மனித வாழ்க்கையின் யதார்த்தம் பற்றியும் இருக்கும்.

நன்றி : TWC

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கம் பக்கம் உச்சம் எச்சம்

நாகார்ஜுனன்

## ஆயுத அரசியல்

ஆயுத அரசியல் என்றால் என்ன? இந்தக் கேள்விக்கு ஒரு குழந்தைகூட டக்கென்று பதில் கூறிவிடும், ஆயுதம் எடுத்துப் போராட்டம் நடத்துவது என்று. இப்படியாகப்பட்ட பதில் அளிக்கப்படும் வகையிலான ஒரு புதிய அகராதியை நவீன தொடர்பு சாதனங்கள் (media) எழுதி வருகின்றன. அதே சமயத்தில் ஆயுத அரசியலானது பல்வேறு வகைகளாக நடப்பதை அவை எழுதுவதில்லை. எழுதினால் எப்படி எழுதுவார்கள், பார்ப்போம்:

போபர்ஸ் பீரங்கியை 1700 கோடி ரூபாய், ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களை 100 கோடி ரூபாய் கொடுத்து வாங்குவது சரிதான், அதில் ஊழல் பண்ணுவதுதான் (அதுவும் வெளியில் தெரிகிற மாதிரி) தப்பு என்கிறார்கள். இதில் பத்மபூஷன் **இந்து** என். ராம், திருமதி சிச்ரா சுப்பிரமணியம், இன்னொரு பத்மபூஷன் **எக்ஸ்பிரஸ்** அருண் ஷோரி முதல் **இந்தியா டுடே**, **தினமணி** வகையறாக்கள் வரை அனைவரும் அடக்கம். ஆக, இவர்களுக்கு மறைக்க வேண்டியதாக ஏதோ உள்ளது. இது ஆயுத இறக்குமதி அரசியல்.

பாக்கிஸ்தானும் சரி, இந்தியாவும் சரி, அந்நியக் கடனைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. பாக்கிஸ்தானிலும் சரி இந்தியாவிலும் சரி பெட்ரோல் விலை உயர்கிறது. பாக்கிஸ்தானில் இருக்கின்ற பிரத்தியேக சூழ்நிலையில் அரசாங்கத்தின் மீது ராணுவத்தின் மறைமுக கண்காணிப்பு இருக்கிறது. இந்தியாவில் புதிதாக தேசிய பாதுகாப்புக் குழு (National Security Council) ஒன்று அமெரிக்கப் பாணியில் அமைக்கப்பட இருக்கிறது. பாக்கிஸ்தானில் ராணுவ பட்ஜெட் எவ்வளவு ஏறுகிறது என்று யாருக்கும் தெரியாது. இந்தியாவில் இந்திரா காங்கிரஸ் / தேசிய முன்னணி / பாரதீய ஜனதா / கம்யூனிஸ்ட் என்று யார் வந்தாலும் ராணுவச் செலவு சுயேச்சையாக ஏறிக்கொண்டே போகும். உதாரணத்துக்கு, காங்கிரசைவிட அதிகமாக அண்டை நாடுகளுடன் நட்பை விரும்பும் தேசிய முன்னணி ராணுவ பட்ஜெட்டை காங்கிரசைவிட அதிகமாக (இன்னும் 2000 கோடி ரூபாய்) உயர்த்தியிருப்பதிலிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்ளலாம்: இங்கே இந்தியாவில் புதிய வகையில் தன்பாட்டுக்குச் செயல்படும் ராணுவ-தொழில் நுட்ப - அதிகாரவர்க்க அமைப்பு ஒன்று (a new military - industrial - bureaucratic complex) உருவாகியிருக்கிறது. இனி தயாரிக்கப்படும் ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யப்படலாம். இது ஆயுத ஏற்றுமதி அரசியல்.

நிலவுவது ஒரு மிரட்டல் - சமன்பாட்டுச் (balance of terror) சூழல். நிஜமாகவே யுத்தம் நடக்குமா (Is war inevitable) என்று **இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி** பத்திரிகையும் பாக்கிஸ்தான்—இந்தியா தேசியக்கொடி போட்டுக் கேள்வி கேட்டு **இந்தியா டுடே** தமிழிலும் எழுதுகின்றன. விமானம் எவ்வளவு, டாங்கி எவ்வளவு, கப்பல் எவ்வளவு என்ற கணக்கு பெருமை தரக்கூடியதுதான். இது ஆயுத துணைக்கண்ட அரசியல்.

## களத்தில் இருப்பது நாம்

இந்திய அரசு 1974 ஆம் ஆண்டில் டாக்டர் ராஜா ராமண்ணாவை வைத்து அணுக்குண்டு பரிசோதனை ஒன்றை நடத்தியது. இதன்பிறகு இவர் இந்திய அணுக்குண்டின் தந்தை என்றழைக்கப்படுகிறார். (ஆமாம், அணுக்குண்டைப் பெற்றெடுத்த தாய், அன்னை இந்திரா என்று ஏன் கூறுவதில்லை?)

ஐரோப்பிய இசையமைப்பாளர்களின் பாடல்களைத் திறமையுடன் பியானோவில் வாசிக்கும் இவர், இளையராஜாவின் How to Name it? காஸெட்டை வெளியிட்டவர் என்பது பழைய செய்தி. இவர்தான் தற்போதைய ராணுவ இணை அமைச்சர் என்பது பிப்ரவரி மாதச் செய்தி.

இப்படி நல்ல, உன்னதமான, செறிவான, சிறந்த, செம்மையான கலை இலக்கிய ஈடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடுகொண்ட மனம், ராணுவரீதியாக இயங்க வல்லது என்கிறேன் நான். ராஜா ராமண்ணா தவிர இதைப் பல உதாரணங்கள் கொண்டு விளக்க முடியும். இப்படிப் பார்க்கலாம் :

வரையறுக்கப்பட்ட களம் ஒன்றில் (limited space) உடலை முன்நிறுத்தி, ஆட்டத்தில் பங்கேற்காத பலபேர் முன்னிலையில், ஆடுவது என்பதுதான் யுத்தம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டால், அது இந்தியா-பாக்கிஸ்தான் கிரிக்கெட், ஹாக்கி விளையாட்டுக்கு மட்டுமன்றி, பரத நாட்டியத்துக்கும் வீடியோ கேம்ஸுக்கும் பொருந்தும் அடுத்த உதாரணமாக தமிழின் சாண்டில்யன் நாவல்களைக் கூறலாம். இவற்றின் பேசுபொருட்களில் ராணுவ வரலாறும் (military history) ஒன்றாக இருப்பதை நான் இங்கு கூற வரவில்லை, மாறாக நாவலின் நீண்ட ஆடுகளம் ராணுவ மனப்பாங்கை வளர்த்தெடுப்பதாக இருக்கிறதுஎன்பதுதான்விஷயம்.

வீடியோ கேம்ஸில் யுத்தரீதியான முஸ்தீபுகள் இருப்பதாகக் கூறினேன். இங்கிருந்துகொண்டே விண்வெளியில் நடத்தப்படும் Star Wars எனப்படும் யுத்தரீதியான சமாச்சாரம் இப்போது அருகில் வந்துவிடும்.

வரையறுக்கப்பட்ட களங்களான சினிமாத் திரை, டிவி திரை போன்றவை உற்பத்தி செய்யும் குப்பை (trash) அதிகமாகிக் கொண்டே போகிறது. நவீன தொடர்பு சாதனங்களின் இத்தகைய குப்பை-உற்பத்தி, Technokitsch என்று அழைக்கப்படுகிறது. இத்தொடர்புசாதனங்களை யார் பயன்படுத்தினாலும் இவை குப்பை தவிர வேறெதையும் உற்பத்திச் செய்வதில்லை என்ற நோக்கில் இவ்வாறு கூறலாம். அதே சமயத்தில் இந்தக் குப்பையானது பல தளங்களில் செயலாற்றி, தன்னை ஒரு serious -ஆன விஷயமாகக் காட்டிக்கொள்வதில் வெற்றியடைகிறது. உதாரணமாக, மஹாபாரம் டிவி தொடர் அனைத்து இந்தியமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு விநியோகிக்கப் படுவதையும், அதற்குக் கிடைத்துள்ள அங்கீகாரத்தையும் குறிப்பிடவேண்டும். 'மஹாபாரதப் பாடல் யுத்தம் பற்றியதுதான்' என்று கூறப்பட்டாலும் அது டிவியில் தொடர்குப்பையாகும்போதுதான் நவீனஇந்தியாவில் பெருத்த இனப்பிளவுகளை, மோதல்களை ஏற்படுத்த வல்லதாக இருக்கிறது என்பதைக் குறித்துக் கொள்ளவேண்டும்.

இப்போது பிரச்சினை, இந்தக் குப்பையை யாராவது உதாசீனப்படுத்திவிட முடியுமா என்பதுதான். அதுதான் குப்பையின் சக்தி, அதிகாரம்.

**காணாமல் போன கறுப்பு வைரம்**

இப்படி ஒவ்வொன்றுக்குள்ளும் வேறு எதையோ பார்க்கும் நிலையிலிருந்து கறுப்பு வைரம் என்றால் என்ன என்று பார்ப்போம். அதற்கு நேரு காலத்தில் பீகார் பிரதேசத்தின் நிலக்கரி என்று அர்த்தம். நேருவின் பேரன் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்காக ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கும் காலத்தில் என்ன அர்த்தம்?

கருத்துமுதல்வாதத்தின்படி அதற்கு நெல்சன் மண்டேலா என்றும், பொருள் முதல்வாதத்தின்படி பெரும்பான்மையான கறுப்புஇன மக்கள் இனஒடுக்குமுறையின்கீழ் வாழும் தென்னாப்பிரிக்காவில் கிடைக்கும் வைரம் என்றும் அர்த்தம். சந்தேகமிருந்தால் பம்பாயிலும் கொழும்பிலும் இருந்து கொண்டு தென்னாப்பிரிக்காவுடன் கள்ளத்தனமாக வியாபாரம் செய்துவரும் வியாபாரிகளைக் கேட்டுப் பாருங்கள். வைர business தவிர வேறு பிஸினஸ் செய்பவர்களும் உங்களுக்கு நிறைய பதில்களைச் சொல்லக்கூடும்.

இதனால்தான் தென்னாப்பிரிக்க இன ஒடுக்குதலுக்கு(apartheid) எதிரான போராட்டத்தை இந்திய அரசு ஆதரிக்கிறதா, நமீபியாவில் சாம் நுஜோமா தலைமையில் அமையப்போகிற அரசுக்கு வாழ்த்துக்கூற பிரதமர் வி. பி. சிங்கும் நிழல் பிரதமர் ராஜீவ்காந்தியும் தனித்தனியே விழுந்தடித்துக் கொண்டு போனது இதனால்தானா என்றெல்லாம் கேட்டால் எனக்குத் தெரியாது. ICF ரயில் கோச்சு விற்பனைக்காகப் போயிருக்கலாம். சௌகரியமான பதில்தான் என்கிறீர்களா? நிஜம்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உங்களுடைய கவலை சௌகரியமான என்னைப் பற்றியது என்றால், என்னுடைய கவலை சௌகரியமான வேறொரு மனிதக் கூட்டத்தைப் பற்றியது. எண்பது சதவிகிதத்துக்கும் மேற்பட்ட கறுப்புஇன மக்களை வெளிநாட்டில் வைத்து ஒடுக்கினால் அது apartheid, இருபது சதவிகித தலித் மக்களை உள்நாடு முழுவதும், ஒரே கிளாஸில் டீ கொடுக்காமல், ஊருக்கு வெளியே காலனியில் வைத்து ஒடுக்கினால் அது பரவாயில்லை என்று சொல்லாமல் சொல்லிக்கொண்டிருப்பவர்களைத் தான் கூறுகிறேன். மறந்துவிட்டேனே, வேண்டுமென்றால் அந்த இருபது சதவிகித தாழ்த்தப்பட்டவர்களில் இரண்டு சதவிகிதத்தினர் பார்ப்பனர்களாக மாறிக் கொள்ள வழி இருக்கிறது!

காலஞ்சென்ற ஜான் ஆபிரகாம் படமான **அம்மா அறியானில்** வந்த Free Free Nelson Mandela என்ற புதுவகை நடனத்தை இங்கே குறிப்பிடலாம். மண்டேலா விடுதலையை உண்மையாகவே கோரிய ஜானை இந்தச் சமூகம் நிராகரித்தது. தலித்துக்களுக்காக குரல் கொடுக்க விரும்புகிறவர்கள் இதைக் கொஞ்சம் குறித்துக்கொள்ளலாம்.

இன்னொரு விஷயம்: நமீபியாவின் 90 சதவிகித நிலம் '10 சதவிகித வெள்ளையர் கையில்தான் தங்கும் என்ற உத்தரவாதத்தின் பேரில்தான் ஐக்கியநாடுகள் சபை மேற்பார்வையிலான சமாதான உடன்படிக்கை. அங்கு இதைத் தாம் விரும்பும்படி மாற்ற முடியாத நிலையில் நுஜோமாவால் என்ன செய்ய முடியும்? மீண்டும் தாடிவளர்த்துக் கொண்டு கெரில்லாவாகப் போவதா?... இதே முரண்பாடு மண்டேலாவுக்கும் பிரச்சினையாகத் தோன்றப் போகிறது.

வெளிநாட்டுக்குப் போகுமுன் **இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி** இதழுக்கு வி.பி.சிங் **அளித்த** பேட்டியில் விளக்கியுள்ளார்.

**பிரித்திஷ் நந்தி :** *அரசியல் என்றால் தங்கள் அகராதியில் என்ன அர்த்தம்?*

**பிரதமர் சிங் :** அரசியல் என்பது முரண்பாடுகளைக் களைவதல்ல; அது முரண்பாடுகளைச் சமனப்படுத்தும் ஒரு கலை (Politics is the art of managing the contradictions). □

## முட்களின் மேல்


நாளைகள் குரோதமாய் என் வரவுக்காய்
காத்திருந்தாலும்
முட்களின் மேல் அபூர்வமாய்
பூத்திருக்கும் பூவுக்கானது
எனது காத்திருப்பு.
ரணங்களின் வலி மறந்து
கருணையை எதிர்நோக்குதலிலும்
அர்த்தப்படுத்த முடிகிறது வாழ்வை.
ஆயினும்,
ஜீவித்திருத்தலின் கொடுமையை
என்னவென்பது.
நட்சத்திரங்களின் ஜொலிப்பை
தென்னங்கீற்றின் மெல்லிய அசைவை
நாளத்தின் உள்உறையும் இசையை
தொலைத்துவிட்டேன்.
வெறுமனே வெளியை
வெறித்திருப்பதற்கும்
கண்கள் வலியற்றனவாகிவிட்டன.
எச்சத்தில் முளைத்து இரு பசுந்தளிரோடு
சுவரில் வேரோடி
வாழ்ந்திருக்கும் ஆலின் மகத்துவம் கண்டு
தெம்பு கொள்ள முடியாது.
நேற்றுகளின் கொடுமை
மறக்கக் கூடியவை.
இன்று
திகிலில் கழிகின்றது.
நாளைகள் குரோதமாய்
என் வரவுக்காய் காத்திருந்தாலும்
முட்களின் மேல் அபூர்வமாய்
பூத்திருக்கும் பூவுக்கானது
எனது காத்திருப்பு.

**ஹம் சத்வனி**

வெளியிடுபவர் : இரா. திரவியம், 12 முதல் பிரதான சாலை நேரு நகர் சென்னை -20.
அச்சிட்டோர் : அலைகள் அச்சகம், சென்னை-24

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

நட்புறவுப் பாலம்
பதிவு எண். டி.என்.எம்.எஸ்.(எஸ்)371
ஏப்ரல் 1990



ஓர்டெகா

# நிகராகுவா



வைலெட்டா

தமிழ்த் தேசிய